# பகுதி IV

# பகுதி IV

**மத்திய வங்கியினதும், இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும், தொழிற்பாடுகளும் தொடர்பான 2004ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்**


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 2004ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம் | 1 |
| 2. | 2004ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி பிணையங்கள் (திருத்தச்) சடடம் | VIII |
| 3. | 2004ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, நிதி நிருவாக (திருத்தச்) சட்டம் | XV |
| 4. | 2004ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (மன்னிப்பை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் | XVII |
| 5. | 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச்சட்டம் | XXI |
| 6. | 2004ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் | XXXII |
| 7. | 2004ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் | XLIX |

## 2004ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்

[2004ஆம் ஆண்டு சனவரி மாதம் 06ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### உள்ளூர்த் திறைசரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1. இச்சட்டம், 2004ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*2. (இதனகத்துப் பின்னர்) "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (417அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 6ஆம் பிரிவு "திறைசேரி உண்டியல்கள் வருமதியாக வரும்போது கொழும்பிலுள்ள திறைசேரியில் செலுத்துதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, திறை சேரி உண்டியல் வருமதியாகும்போது செலுத்துதலும் வேண்டும்.*

*ஆயின், எவ்வாறாயினும், திறைசேரி உண்டியலொன்று எந்நாளன்னு வருமதியாக வருகின்றதோ அந்நாளானது மத்திய வங்கியானது, "அலுவலுக்காகக் திறக்கப்படாவிடின், விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைகளுக்கிணங்கக் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை, அச் சட்டவாக்கத்தின் 7அ, 7ஆ, 7இ என்னும் பிரிவுகளாகப் பயனுருதலும் வேண்டும்.*

*"முதனிலை வியாபாரிகளினதும் வணிகரல்லாத விலைக் கேள்வியாளர்களினதும் கொடுக்கல் வாங்கல்களை மத்திய வங்கி மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும்*

*7.அ. இக்கட்டளைச் சட்டத்தில் குறிப்பாக 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுகளுக்கும் அடங்கியுள்ள எதற்கும் பக்கமின்றி, மத்திய வங்கியானது, எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களில் முதனிலை வியாபாரிகளினதும் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக் கேள்வியாளர்களினதும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அவர்களை ஒழுங்கு படுத்தலாம், மேற்பார்வை செய்யலாம் அத்துடன் கண்காணிக்கலாம்.*

*எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களை வழங்குதல்*

*7.ஆ. அமைச்சர், கசெற்றிலும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இரு உள்ளூர்ச் செய்தித் தாள்களிலும் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம், எந்த நாளிலிருந்து திறைசேரி உண்டியல்கள் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்கள் என்ற வடிவத்தில் வழங்கப்படலாமோ அந்த நாளைப் பொது மக்களுக்கு அறிவிக்கலாம்.*

*எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களை மாற்றுதல்*

*7இ.(1) மத்திய வங்கியானது, கசெற்றிலும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளிலுள்ள இரு உள்ளூர்ச் செய்தித் தாள்களிலும் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம், குறித்துரைக் கப்பட்ட முதிர்வுத் தேதியைக் கொண்டவையும் எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்தில் வழங்கப்பட்டவையுமான திறைசேரி உண்டியல்களை வைத்திருப்போரை, அவர்கள் அவ்வாறு விரும்பின், விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைக்கிணங்க, அத்தகைய திறைசேரி உண்டியல்கள்களாக மாற்று வதற்காக மீள ஒப்படைக்கும்படி தேவைப்படுத்தலாம். அத்தகைய திறைசேரி உண்டியல்கள், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களாக மாற்றப்படுவதன்மேல், இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு எழுத்திலில்லாத திறைசேரி உண்டியலொன்றாக மாற்றப்படாத ஒரு திறைசேரி உண்டியல் தொடர்பில் இக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்குள்ள பொறுப்பைப் பாதிப்பதாக அல்லது பொறுப்பு விடுவிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.".*

*4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-*

"(ஆ) அத்தகைய கணக்குகளிலுள்ள எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களின்மீது செலுத்தப்பட்ட முதிர்வு வரும்படிகள் எந்தக் காலப்பகுதியினுள் வாடிக்கையாளர்களுக்கு அல்லது அதற்கு உரித்துள்ள ஆட்களுக்குச் செலுத்தப்பட வேண்டுமோ அந்தக் காலப்பகுதி:";

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "வீதமும் உபாயங்களும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விதமும் உபாயங்களும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஊ) மத்திய வங்கித் தகவல் கொடுத்துதவுதலும், எந்த முறையிலும், வழிவகைகளிலும், காலப் பகுதிகளிலும், அத்தகைய தகவல் கொடுத்துதவப்பட வேண்டுமோ அந்த முறையும், வழி வகைகளும், காலப்பகுதிகளும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

9. (1) மத்திய வங்கியானது, நேரடிப் பங்குபற்றுநரொருவராக இருப்பதற்கு, எவரேனும் முதனிலை வணிகரை அல்லது வேறு ஆளை எழுத்தில் நியமிக்கலாம் என்பதுடன் அவர், (2)ஆம் உட் பிரிவிற்குறித்துரைக்கப்படுகின்றவாறு எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் கணக்குகளைப் பேணுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(2) நேரடிப் பங்குபற்றுநரொருவர், பணச் சட்டத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட வைப்பக மொன்றில், பணச் சட்டத்தின்கீழ், ஆக்கப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிக்களுக்கும் இணங்க, அத்தகைய நேரடிப் பங்குபற்றுநர்கள் எந்த எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களுக்கும் ஏனைய எழுத்திலில்லாத பிணையங்களுக்கும் உரித்துடையவராகவுள்ளாரோ அந்த எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களையும் ஏனைய எழுத்திலில்லாத பிணையங்களையும் வைத்திருப்பதற்கும், எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களிலும் ஏனைய எழுத்திலில்லாத பிணையங்களிலும் அத்தகைய நேரடிப் பங்குபற்றுநரின் அக்கறைகளைப் பதிவதற்கும் ஆன பிணையங்கள் கணக்குகளைப் பேணுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, நேரடிப் பங்குபற்றுநர் ஒருவருக்கு, (2) ஆம் உட்பிரிவின்கீழ் நேரடிப் பங்குபற்றுநரொருவரினால் பேணப்படும் கணக்குகளில் அத்தகைய நேரடிப் பங்குபற்றுநர் எந்த எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்ளிவ் சொந்தக்காரராகப் பதியப்படுகின்றாரோ அந்த எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களின் மீதான முதிர்வு வரும்படிகள் செலுத்தப் படற்பாலனவாகவரும் நாளன்று செலுத்துதல் வேண்டும்.

(4)மத்திய வங்கியானது, அதன் சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும், அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவரின் விடயத்தில்,அதன் சொந்தக் கணக்கிலும் வாடிக்கையாளர்களின் கணக்குகளிலும் வைத்திருக்கப்படுபவை தொடர்பிலும் வைத்திருக்கப்படும் எவையேனும் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக அல்லது அவை சம்பந்தமாக நேர டிப் பங்குபற்றுநரொருவரினாற் பேணப்படும் எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது கணக்குப் பரிசோதனை செய்து அவற்றின் பிரதிகளை எடுக்கலாம். நேரடிப் பங்கு பற்றுநரும் அதன் அலுவலர்களும், பணிப்பாளர்களும், ஊழியர்களும், சேவையாளர்களும், முகவர்களும், மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் கடிதத் தொடர்புகளையும் அல்லது வேறெவையேனும் ஆவணத்தையும் மத்திய வங்கிக்குக் கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன், எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் இக்கட்டளைச் சட்டத்தினால் மத்திய வங்கியின்மீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு அதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா உதவியையும் மத்திய வங்கிக்கு வழங்குதலும் வேண்டும்.

இப்பிரிவின் ஏற்பாடுகள், இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட ஏதேனும் புத்தகத்துக்கு,

பதிவேட்டுக்கு, கணக்குகளுக்கு மற்றும் கடிதத் தொடர்புகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல் ஒன்று தொடர்பில் அரசாங்கம் ஏதேனும் பொறுப்பை உறுகின்ற அல்லது எவையேனும் முதிர்வு வரும்படிகளின் கொடுப்பனவைச் செய்கின்ற பட்சத்திலும், நேரடிப் பங்குபற்றுநரின் அல்லது வணிகர் நேரடிப் பங்கு பற்றுநரின் ஏதேனும் தவறுகையின் விளைவாக அல்லது அதன் காரணமாக அத்தகைய பொறுப்பு எழுகின்ற விடத்தும் அத்தகைய கொடுப்பனவு செய்யப்படுகின்றவிடத்தும், அத்தகைய பங்குபற்றுநர் அரசாங்கத்தினால் கோரப்படுவதன்மீது அத்தகைய பொறுப்பு அல்லது கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கத்துக்கு நட்டோத்துரவாதம் அளிப்பதற்குப் பொறுப்புடையதாதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக "தவறுகை" என்பது-

(அ) இக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது இக்கடடளைச் சட்டத்தினாற் கையாளப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பாக வேறேதேனும் சட்டத்தினால் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவருக்கு அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் பணியை நிறைவேற்றுவதில் அல்லது ஏதேனும் கடமையை ஆற்றுவதில் நேரடிப் பங்குபற்றுநரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் ஏதேனும் அசட்டையை அல்லது தவறியமையை உள்ளடக்கும் ; அத்துடன்

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின்மீது அல்லது இக்கடளைச் சட்டத்தினால் கையாளப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தவறொன்றாகமையும், நேரடிப் பங்குபற்றுநரின் பாலான அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் பாலான ஏதேனும் செயலை அல்லது செய்யாமையை-

(i) அத்தகைய தவறு தொடர்பில் ஏதேனும் குற்றவழக்கு இருந்துள்ளதாயினுஞ்சரி அல்லாதாயினுஞ்சரி ; அல்லது

(ii) அத்தகைய செயல் அல்லது செய்யாமை நேரடிப் பங்குபற்றுநரால் அல்லது வணிகர் நேரடிப் பங்கு பற்றுநரினால் அல்லது அத்தகைய நேரடிப் பங்கு பற்றுநரின் எவரேனும் பணிப்பாளரினால், அலுவலரினால், ஊழியர்களினால் அல்லது முகவரினால் புரியப்பட்டதாயினுஞ்சரி அல்லாதாயினுஞ்சரி

உள்ளடக்கும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு. அப்பிரிவின் (2), (3), (4), (5), (6), (7), (8) மற்றும் (9) ஆகிய உட்பிரிவுகளை நீக்கவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2)வணிகர் நேரடிப் பங்குபற்றுநர், 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கணக்குகளைப் பேணுவதுடன் மேலதிகமாக, பணச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட வைப்பகமொன்றில், அத்தகைள ஒவ்வொரு வாடிக்கையாளரும் பணச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு வாடிக்கையாளரும் பணச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் விதிகளுக்கும் இணங்க எந்த எழுத்தில்லாத திறைசேரி உண்டியல்களுக்கும் வேறு எழுத்திலில்லாத பிணையங்களுக்கும் உரித்துக் கொண்டுள்ளாரோ அந்த எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களை வைத்திருப்பதற்கும் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களிலும் ஏனைய எழுத்திலில்லாத பிணையங்களிலும் அத்தகைய ஒவ்வொரு வாடிக்கையாளர்களினதும் அக்கறைகளைப் பதிவதற்கும் அதன் வாடிக்கையாளர்களுள் ஒவ்வொருவரும் தொடர்பில் கணக்குகளைப் பேணுதலும் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கு, 9ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுகளுடன் சேர்த்து மேலதிகமாக, (2)ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினாற் பேணப்பட்ட கணக்குகளில் எந்த எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் சொந்தக்காரராகப் பதியப்பட்டுள்ளாரோ, அந்த எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்கள் மீதான முதிர்வு வரும்படிகளை, அத்தகைய முதிர்வு வரும்படிகள் செலுத்தப்படற்பாலனவாகவரும் நாளன்று செலுத்துதல் வேண்டும்.

(4). வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் அல்லாத ஆளெவரும், வேறெவரேனுமாளின் சார்பில் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களில் கொடுக்கல் வாங்கல் செய்தலாகாது. எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களின் ஒன்றில் கைமாற்றமொன்றைச் செய்வதற்கு விரும்புகின்ற நேரடிப் பங்குபற்றுநரல்லாத எவரெனுமாளும் மத்திய வங்கியும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் ஊடாக மட்டுமே அவ்வாறு செய்தல் வேண்டும்.

(5) வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவர், இக்கட்டளைச் சட்டத்தின்கீழான அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கு அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கு அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் அதனை இயலச் செய்வதற்கும் புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகள் எவையுமிருப்பின் அவற்றுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(6) வாடிக்கையாளர் கணக்கொன்றில் வைத்திருக்கப்படும் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் (3)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, மத்திய வங்கியிடமிருந்து கொடுப்பனவு என்ற வகையாக ஏதேனும் தொகை வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவரினாற் பெறப்படுவதன்மேல், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர், அத்தகைய தொகையை, வாடிக்கையாளருக்கு அல்லது சட்டத்தின் மூலம் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரும் வாடிக்கையாளரும் திறத்தவராகவுள்ள எழுத்திலானவோர் உடின்படிக்கையின் நியதிகளின்படி அத்தகைய கொடுப்பனவுக்கு உரித்துள்ள வேறெவரேனும் திறத்தவருக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பில் குறித் துரைக்கப்பட்ட காலத்தினுட் செலுத்துதல் வேண்டும்.

(7) வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவர், ஏதேனும் காரணத்துக்காக, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் (6)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வாடிக்கையாளர் ஒருவருக்கு அல்லது கொடுப்பனவுக்கு உரித்துள்ள திறத்தவர் ஒருவருக்குக் கொடுப்பனவு செய்ய இயலாதிருப்பின், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர், அத்தகைய பணிப்புகளில் குறித்துரைக்கப்படக் கூடியவறான அத்தகைய காலப்பகுதியினுள் செலுத்தப்படாது எஞ்சியுள்ள பணத்தொகையை மத்திய வங்கியின் விதித்துரைக்கப்பட்ட கணக்கொன்றுக்குக் கைமாற்றுதல் வேண்டுமென்பதுடன், விடயத்திற்கேற்ப, கொடுப்பனவு பற்றியும் வாடிக்கையாளர் அல்லது வேறு திறத்தவர் பற்றியும் மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான, அத்தகைய தகவலை மத்திய வங்கிக்கு அளித்தலும் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின் நியதிகளின்படி மத்திய வங்கியின் விதித்துரைக்கப்பட்ட கணக்கொன்றுக்குக் கைமாற்றப்பட்ட பணத்தொகைகள், அதற்கு உரித்துள்ள ஆட்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், உரிமை கோரப்படாதிருக்கும் எவையேனும் பணங்கள் பற்றி அத்தகைய நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்படுகின்ற விதத்தில் மத்திய வங்கியினால் அவை கையாளப்படுதல் வேண்டும் அல்லது கையுதிர்க்கப்படுதல் வேண்டும்.

(9) வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவர், அதன் அலுவலையும் நிருவாகத்தையும் தகுந்தமுறையில் நடாத்துவதற்காகத் தேவைப்படும் அளவுவரை தவிர, ஒரு வாடிக்கையாளருக்காகப் பேணப்படும் கணக்குகள் தொடர்பிலும், அதனோடு தொடர்புபட்ட ஏதேனும் கருமம் தொடர்பிலும் அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், ஒரு வாடிக்கையாளரின் கணக்குத் தொடர்பான ஏதேனும் தகவலை, மத்திய வங்கி தவிர்ந்த எவரேனுமாளுக்கு, வாடிக்கையாளரினால் அவ்வாறு செய்யும்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது நீதிமன்றக் கட்டளையொன்றின்கீழ் அவ்வாறு செய்யும்படி அது தேவைப்படுத்தப்படுமிடத்துத் தவிர, வெளிவிடுதலுமாகாது.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

11.(1) பத்தாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் வாடிக்கையாளர் ஒருவருக்காக பேணப்பட்ட ஒரு கணக்கிலிருந்து அல்லது கணக்கினுள் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியலொன்றுக்கான உரித்துக் கைமாற்றம் செய்யப்படுமிடத்து, அல்லது எழுத்திலில்லாத திறைசேரி உண்டியலில் எவரேனுமாளின்

"எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களைக் கைமாற்றுதல்

அக்கறையொன்று பதியப்படுகின்றவிடத்து அல்லது அத்தகைய கணக்கிலுள்ள ஏதேனும் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியலில் அத்தகைய ஏதேனும் அக்கறை தொடர்பில் ஏதேனும் திருத்தம் அல்லது வேறுபாடு செய்யப்படுமிடத்து, அத்தகைய வணிக் நேரடிப் பங்குபற்றுநர் மத்திய வங்கியினாற் காலத்துக்குக்காலம் வழங்கப்படக் கூடிய வாறான அத்தகைய பணிப்புக்களுக்கிணங்கவுள்ள உறுதிப்பாடொன்றை அத்தகைய வாடிக்கையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எழுத்திலில்லாத பிணையங்களுக்கான வைப்பகத்தில் பேணப்பட்ட கணக்குகள் தொடர்பில் கூற்றுக்களை அல்லது உறுதிப்பாடுகளை வழங்குவதற்கு அத்தகைய வைப்பக வசதிகளை வழங்குபவர்மீது பணச்சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட ஏதேனும் கடப்பாட்டை மதிப்புக் குறைப்பதாக பொருள் கொள்ளப்படுதலாகாது; அத்துடன் வைப்பகத்தினால் அவ்வாறு வழங்கப்பட்ட கூற்றுக்கும் அல்லது உறுதிப்பாட்டுக்கும் (1)ஆம் உட் பிரிவின்கீழ் வழங்கப்படும் கூற்றுக்கும் அல்லது உறுதிப்பாட்டுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் வைப்பகத்தினால் வழங்கப்படும் கூற்று அல்லது உறுதிப்பாடு மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(3) ஏற்புடையற்பாலதான ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கமைய, வணிகர் நேரடிப் பங்கு பற்றுநர், வாடிக்கையாளர்களினால் ஒரு வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் மூலம் எடுக்கப்படும். அல்லது செய்யப்படும் எல்லாக் கைமாற்றங்கள் தொடர்பிலும் அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு முழுமையான பொறுப்புள்ளவராதலும், ஆளாதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உறுதிப்பாடு, இணக்கப் பேச்சுவார்தை மூலம் பெறக்கூடியதாக இருத்தலாகாதென்பதுடன், அது எந்த எழுத்திலில்லாத திறை சேரி உண்டியல் தொடர்பில் அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய சான்றாக பட்டுமே பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது, இப்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவிப்பு அல்லது உறுதிப்பாடு அல்லது பெற்றுக் கொள்ளல் அல்லது பற்றுச்சீட்டு எழுத்திலில்லாத வடிவத்தில் வழங்கப்படுவதனையும், மத்திய வங்கியினால் அதற்கெனக் காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான கம்பிமூலம், தொலைபேசி மூலம், செய்மதி மூலம், வடம் மூலம் அல்லது அத்தகைய வேறேதேனும் இலத்திரனியல், கதந்த அல்லது கட்புல ஊடகங்கள் மூலம் அனுப்பப்படுவதனையும் அல்லது ஒப்படைக்கப்படுவதனையும் அனுமதிக்கலாம்.

(6) எழுத்திலில்லாத திறைசேரி உண்டியலின் இலத்திரனியற் பதிவேடு அல்லது இக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இலத்திரனியல் வடிவத்தில் வழங்கப்பட்ட அல்லது பேணப்பட்ட ஏதேனும் உறுதிப்பாடு, அறிவிப்பு, பெற்றுக்கொள்ளல், பற்றுச்சீட்டு அல்லது வேறு ஆவணம் அல்லது பதிவேடு என்பவற்றுக்கு அத்தகைய கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் இலத்திரனியல் வடிவத்தில் பேணப்படுகின்றது. அல்லது அத்தகைய உறுதிப்பாடு,அறிவிப்பு, பெற்றுக்கொள்ளல், பற்றுச்சீட்டு அல்லது வேறு ஆவணம் அல்லது பதிவேடு இலத்திரனியல் வடிவத்தில் வழங்கப்படுகின்றது அல்லது பேணப்படுகின்ற து என்ற ஏதுவின்மீது மட்டுமே சட்டப்பயனோ, செல்லுபடியாகுந்தன்மையோ மறுக்கப்படலாகாதென்பதுடன் அத்தகைய உறுதிப்பாடு, உறுதிப்பாடு, அறிவிப்பு , பெற்றுக்கொள்ளல், பற்றுச்சீட்டு அல்லது வேறு ஆவணம், அல்லது பதிவேடு 1995ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 11ஆம் பாகத்துக்கும் 111ஆம் பாகத்துக்கும் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னர் கணனிச் சான்றை அளித்தல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்துக்கும் இணங்க ஏதேனும் நீதி மன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னரான வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக அளிக்கவும்படலாம்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம்பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2) இக் கட்டளைச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது ஒரு கோடி ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது தவறானது எவரேனுமாளுக்கு பண வகையான நட்டத்தை அல்லது பணவகையான இலாபத்தை அல்லது பணப் பெறுமதியில் கணிக்கப்படற்பாலதான நட்டத்தை அல்லது பணப் பெறுமதியில் கணிக்கப்படற்பாலதான நட்டத்தை அல்லது இலாபத்தை விளைவித்துள்ளவிடத்து, அத்தகைய நட்டத்தின் அல்லது இலாபத்தின் பெறுமதியினது இரு மடங்குக்குச் சமமானவொரு குற்றப்பணத்துக்கு, அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

9. முதன்மைச்சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச் சட்டவாக்கத்தின் 15அ . 15ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"கட்டுப்பணமில்லாத பிணையங்களிலான கொடுக்கல் வாங்கல்கள்

15.அ. இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்கள் ஒழுங்கு விதிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கைமாற்றப்படுதல், அடைமானம் வைக்கப்படுதல், பாரபந்தத்துக்குட்படுத்தப்படுதல் கடனாகக் கொடுக்கப்படுதல், கடனாகப் பெறப்படுதல் அல்லது வேறுவகையாகக் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கப் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் கைமாற்றம், அடைமானம் வைக்கப்படுதல், பாரபந்தம், கடன்கொடுப்பனவு, கடன்பெறுகின்றமை, அல்லது வேறேதேனும் கொடுக்கல் வாங்கல் எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்தில் வழங்கப்படும் எழுத்திலில்லாத திறைசேரி உண்டியல்களிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான வேறேதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், செல்லுபடியுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தலும் வேண்டும்.

தவறுகளை இணக்குதல்

15.ஆ. (1) மத்திய வங்கியானது, நீதிமன்றத்தின் சம்மதத்துடன், இச்சட்டத்தின் கீழான தவறொன்று எச் சூழ்நிலைகளில் புரியப்பட்டதென்பதைக் கருத்திற்கொண்டு, ஐம்பது இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு பணத்தொகைக்காக அத்தகைய தவறை இணக்கலாம். அல்லது தவறானது எவரேனுமாளுக்குப் பணவகையான நட்டத்தை அல்லது பணவகையான இலாபத்தை அதன் பணப்பெறுமதியில் கணிக்கப்படற்பாலதான நட்டத்தை அல்லது இலாபத்தை விளைவித்துள்ளவிடத்து, அத்தகைய நட்டத்தின் அல்லது இலாபத்தின் பெறுமதியினது ஒன்றரை மடங்குக்குச் சமமான பணத்தொகையொன்றுக்காக இணக்கலாம்.

(2) இப்பிரிவின் கீழ் தவறொன்றை இணக்குதலானது, விடுதலையொன்றின் பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு இத்தால் பன்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "வாடிக்கையாளர்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"வாடிக்கையாளர்" என்பது, வணிகர் நேரடிப் பங்கு பற்றுநரொருவர் தொடர்பாக, அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் மூலம் எழுத்திலில்லாத திறைசேரி முறிகளை அல்லது அதன் கண்ணுள்ள ஓர் அக்கறையைக் கொள்வனவு செய்கின்ற அல்லது வேறுவகையாகக் கொள்ளுகின்ற அல்லது கையாளுகின்ற அல்லது அத்தகைய முறியின் அல்லது அக்கறையின் சாத்தியமாகவுள்ள கொள்ளுதலுக்காக அல்லது கையாளுக்காக அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருடன் இணக்கப் பேச்சுவார்த்தை நடாத்துகின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் என்பதுடன், சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்குமிடத்து, அத்தகைய வாடிக்கையாளரின் அல்லது அத்தகைய வாடிக்கையாளரின் மரணச் சொத்தின் சட்டப்படியான பிரதி நிதியை உள்ளடக்குதலும் வேண்டும்;

(2) "வணிகர் இடைத்தரகர்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை சேர்ப்பதன் மூலமும்:-

"பணச் சட்டம்" என்பது, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான (422ஆம் அத்தியாயமான) பணச்சட்டம் என்ற பொருளாகும் என்பதுடன், அதன்கண் அடங்கியுள்ள கருமங்கள் தொடர்பாக அத்தகைய சட்டத்தை மாற்றீடு செய்கின்ற ஏதேனும் சட்டவாக்கத்தை உள்ளடக்குதலும் வேண்டும்; அத்துடன் ஏதேனும் பிரிவு இக்கட்டளைச் சட்டத்தில் குறிப்பாகக் குறிப்பீடு செய்யப்படுமிடத்து, அக்குறிப்பீடானது, அடுத்துப் பின்னரான சட்டவாக்கத்திலுள்ள நேரொத்த பிரிவுகளை உள்ளடக்குவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

"பிணையங்கள் கணக்கு" என்பது, (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2004ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் (திருத்தச்) சட்டம்

[2004ஆம் ஆண்டு சனவரி மாதம் 06ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2004ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 5அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவினை அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) இக்கட்டளைச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளுக்கும் குறிப்பாக 21இ, 21ஈ, 21உ மற்றும் 21ஊ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கும் பங்கமின்றி, மத்திய வங்கியானது எழுத்திலான சான்றிதழ்கள் வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளுடன் தொடர்புபட்ட முதனிலை வியாபாரிகளினதும் பதவிப் பெயர் குறிப்பிடப்பட்ட வணிகரல்லாத விலைக் கேள்வியாளர்களினதும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் ஆன அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"திறைசேரி முறிகள்

21அ. (1) ஒவ்வொரு திறைசேரி முறியும், வழங்கப்படுவதன் மீது இக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க 4ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலும், திகதிகளிலும் அல்லது அத்தகைய முறியை மீட்பதற்கென அத்தகைய கட்டளையில் ஒதுக்கப்பட்ட ஒரு விருப்பத் தெரிவைப் பின்பற்றி முறியானது எந்த முதல் தொகைக்கு வழங்கப்பட்டதோ அந்தப் பணத்தொகையையும் அதன் மீதான வட்டியையும் செலுத்தவதற்கு அரசாங்கத்தைப் பிணித்தல் வேண்டும்;

ஆயின், அத்தகைய கொடுப்பனவு எந்தநாளன்று கொடுக்குமதியாக வருகின்றதோ அந்நாளானது மத்திய வங்கியானது அலுவலுக்காகத் திறக்கப்படாத நாளாகவிருப்பின் அதன் சார்பில் விதித்துரைக்கப்படக் கூடியவாறான நடைமுறைக்கிணங்கக் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) இக் கட்டளைச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் திறைசேரி முறிகள் எழுத்திலான சான்றிதழ் வடிவத்திலான முறிகளாக அல்லது எழுத்திலில்லாத திறைசேரி முறிகளாக வழங்கப்படலாம்.".

4. முதன்மைச் சட்டவாக்கததின் 21இ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஆ) அத்தகைய கணக்குகளிலுள்ள எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் மீது போகுமதியாகவுள்ள முதல் என்ற வகையாகவும், வட்டி என்ற வகையாகவும்,

மீட்பு வரும்படிகள் என்ற வகையாகவும் உள்ள ஏதேனும் பணத்தொகை, ஏதேனும் இருப்பின், அதற்குரித்துள்ள வாடிக்கையாளர்களுக்கு அல்லது ஆட்களுக்கு எந்தக் காலத்தினுள் செலுத்தப்பட வேண்டுமோ அந்தக் காலம்.".

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "முறையும் வரிகளும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முறையும் வழிகளும்" என்னும்;" சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஊ) மத்திய வங்கிக்குத் தகவல் கொடுத்துதவுதலும் அத்தகைய தகவல் வழங்கப்பட வேண்டிய முறையும் வழிகளும் மற்றும் காலப்பகுதிகளும்:";

(2) அப் பிரிவின் (3)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(4) மத்திய வங்கி, கசெற்றிலும் மற்றும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் உள்ள இரண்டு உள்ளூர் செய்தித் தாள்களிலும் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் விதித் துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நடைமுறைக்கிணங்க, எழுத்திலில்லாத திறைசேரி முறியாக மாற்றுவதற்காக, அத்தகைய அறிவிப்பில் குறித்துரைக்கப்பட வேண்டிய ஒரு தொடரைச் சார்ந்த எழுத்திலான சான்றிதழ்கள் வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளை ஒப்படைக்குமாறு அழைக்காலம். அத்தகைய திறைசேரி முறிகள் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் மாற்றப்பட்டதன்மேல், இக்கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும், அவ்வுட்பிரிவின் நியதிகளின்படி எழுத்திலில்லாத திறைசேரி முறியாக மாற்றப்படாத, அவ்வுட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட தொடரைச் சார்ந்த எழுத்திலான சான்றிதழ் வடிவத்தில் வழங்கப்பட்ட திறைசேரி முறியின் மீது கொடுப்பனவைச் செய்வதற்கு இக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்குள்ள பொறுப்பைப் பாதிப்பதாகவோ அல்லது விடுவிப்பதாகவோ பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.".

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஈ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"நேரடிப் பங்கு பற்றுநர்கள்

21ஈ. (1) மத்திய வங்கியானது நேரடிப் பங்குபற்றுநர் ஒருவராக இருப்பதற்கு எவரேனும் முதனிலை வணிகரை அல்லது வேறு ஆளை எழுத்தில் நியமிக்கலாம். நேரடிப் பங்கு பற்றுநர் ஒருவர் இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் தொடர்பில் கணக்குகளைப் பேணுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் பணச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட வைப்பகத்தில் அல்லது மேற்சொல்லப்பட்ட சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பேணப்படும் வைப்பகமொன்றில், பணச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் விதிகளுக்கும் இணங்க, அத்தகைய நேரடிப் பங்கு பற்றுநர் எந்த எழுத்திலில்லாத திறைசேரி முறிகளுக்கும் ஏனைய எழுத்திலில்லாத பிணையங்களுக்கும் உரித்துடையவராகவுள்ளாரோ அந்த எழுத்திலில்லாத திறைசேரி முறிகளையும் ஏனைய எழுத்திலில்லாத பிணையங்களையும் வைத்திருப்பதற்கும் எழுத்திலில்லாத திறைசேரி முறிகளிலும் ஏனைய எழுத்திலில்லாத பிணையங்களிலும் அத்தகைய நேரடிப் பங்குபற்றுநரின் அக்கறைகளைப் பதிவதற்கும் ஆன எழுத்திலில்லாத பிணையங்கள் கணக்குகளைப் பேணுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, நேரடிப் பங்குபற்றுநர் ஒருவருக்கு, (2)ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய நேரடிப் பங்குபற்றுநரொருவரினால் பேணப்படும் கணக்குகளில் அத்தகைய நேரடிப் பங்குபற்றுநர் எந்த எழுத்திலில்லாத திறைசேரி முறிகளின் சொந்தக் காரராகப் பதியப்பட்டுள்ளாரோ அந்த எழுத்திலில்லாத திறைசேரி முறியின் மீது போகுமதியாகவரும் முதலாகவும், வட்டியாகவும், மீட்பு வரும்படிகளாகவும் உள்ள பணத்தொகை, ஏதேனுமிருப்பின், அதனை முதல் என்ற வகையாகவும் வட்டி என்ற வகையாகவும் அல்லது மீட்பு வரும்படிகள் என்ற வகையாகவும் அது கொடுபடற்பாலதாக வரும் நாளன்று செலுத்துதல் வேண்டும்.

(4) மத்திய வங்கியானது, நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் அவரின் சொந்தக் கணக்கில் பேணப்பட்ட எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் தொடர்பான அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் விடயத்தில் அவரின் சொந்தக் கணக்கிலும் வாடிக்கையாளர் கணக்குகளிலும் பேணப்பட்ட எவையேனும் எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் தொடர்பான எவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது கணக்குகள் உட்பட எவையேனும் எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் தொடர்பாக அல்லது அவற்றைப் பாதிக்கும் எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது கணக்குகளைப் பார்வையிடலாம் என்பதுடன், அவற்றின் பிரதிகளையும் எடுக்கலாம். நேரடிப் பங்கு பற்றுநரும் அல்லது வணிகர் நேரடிப் பங்கு பற்றுநரும் அவரின் அலுவலர்கள், பணிப்பாளர்கள், ஊழியர்கள், சேவையாளர்கள் மற்றும் முகவர்கள் என்போரும் மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்படக் கூடிய வாறான அத்தகைய எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் மற்றும் கடிதத் தொடர்புகளையம் அல்லது வேறு எவையேனும் ஆவணங்களையும், மத்திய வங்கிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் என்பதுடன், எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் தொடர்பாக இக்கட்டளைச் சட்டத்தினால் மத்திய வங்கிமீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு அதற்குத் தேவைப்படக் கூடிய வாறான அத்தகைய உதவிகள் எல்லாவற்றையும் மத்திய வங்கிக்கு வழங்குதலும் வேண்டும். இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட எவையேனும் புத்தகங்களுக்கும், பதிவேடுகளுக்கும், கணக்குகளுக்கும் மற்றும் கடிதத் தொடர்புகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் தொடர்பில் முதல், வட்டி அல்லது மீட்புவரும்படி என்ற வகையாக போகமதியான ஏதேனும் பணத்தொகை தொடர்பில் அரசாங்கமானது ஏதேனும் பொறுப்பை உறுகின்ற அல்லது கொடுப்பனவைச் செய்கின்ற விடயத்திலும் அத்துடன் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் அல்லது வணிகர் நேரடிப் பங்கு பற்றுநரொருவரின் ஏதேனும் தவறுகையின் விளைவாக அல்லது அதன் காரணமாக அத்தகைய பொறுப்பு எழுகின்ற அல்லது அத்தகைய கொடுப்பனவு செய்யப்படுகின்ற விடயத்திலும் அத்தகைய பங்குபற்றுநர், அரசாங்கத்தினால் கோரப்பட்டதன்மேல் அத்தகைய பொறுப்பு அல்லது கொடுப்பனவு தொடர்பாக நட்டோத்தரவாதமளிப் பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக, "தவறுகை" என்பது–

(அ. இக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது இக் கட்டளைச் சட்டத்தினாற் கையாளப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் நேர டிப் பங்குபற்றுநர் ஒருவருக்கு அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்று நரொருவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் பணியை நிறைவேற்றுவதில் அல்லது ஏதேனும் கடமையைப் புரிவதில் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் அல்லது நேரடிப் பற்றுநரின் ஏதேனும் அசட்டையை அல்லது தவறியமையை உள்ளடக்கும்; அத்துடன்

(ஆ) இக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது இக்கட்டளைச் சட்டத்தினால் கையாளப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ்த் தவறொன்றாகவமையும், நேரடிப் பங்குபற்றுநரின் தரப்பிலான அல்லது வணிகர்

நேரடிப் பங்குபற்றுநரின் தரப்பிலான ஏதேனும் செயலை அல்லது செய்யாமையை-

(i) அத்தகைய தவறு தொடர்பில் ஏதேனும் குற்றவழக்கு இருந்துள்ளதாயினுஞ்சரி அல்லாதாயினுஞ்சரி; அல்லது

(ii) அத்தகைய செயல் அல்லது செய்யாமை ஆனது நேரடிப் பங்குபற்றுநரால் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் அல்லது அத்தகைய நேரடிப் பங்கு பற்றுநரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் எவரேனும் பணிப்பாளரினால் அலுவலரினால் ஊழியரினால் அல்லது முகவரினால் புரியப்பட்டதாயினுஞ்சரி, அல்லாதாயினுஞ்சரி,

உள்ளடக்கும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21உ என்னும் பிரிவு அதன் உட்பிரிவுகள் (2), (3), (4), (5), (6), (7), (8), மற்றும் (9) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், 21ஈ என்னும் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ்ப் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கணக்குகளைப் பேணுவதுடன் மேலதிகமாக, பணச்சட்டத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட வைப்பகமொன்றில், அத்தகைய வாடிக்கையாளர் வைத்திருப்பதற்கு உரித்துக் கொண்டுள்ள எழுத்திலில்லாத திறைசேரி முறிகளையும் ஏனைய எழுத்திலில்லாத பிணையங்களையும் வைத்திருப்பதற்கு அதன் வாடிக்கையாளர் ஒவ்வொருவர் தொடர்பிலும் கணக்குகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், எழுத்திலில்லாத திறைசேரி முறிகளிலும் எழுத்திலில்லாத பிணையங்களிலும் அத்தகைய வாடிக்கையாளர்களின் அக்கறைகளை பணச்சட்டத்தின் கீழ ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் விதிகளுக்கும் இணக்கப் பதிதலும் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கு, 21ஈ என்னும் பிரிவின் (3) உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுகளுடன் மேலதிகமாக, (2)ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய வணிகர் நேரடிப் பங்கு பற்றுநரினால் பேணப்பட்ட கணக்குகளில், எந்த எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் தொடர்பில், அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் வாடிக்கையாளர் சொந்தக் காரராகப் பதியப்படுகின்றாரோ அந்த எழுத்திலில்லாத திறைசேரி முறிகளின் மீது முதல் என்ற வகையாகவும், வட்டி என்ற வகையாகவும், மீட்புவரும்படிகள் என்ற வகையாகவும் போகுமதியாகவரும் தொகை, ஏதேனும் இருப்பின், அதனை முதல் என்ற வகையாகவும், வட்டி என்ற வகையாகவும் மீட்பு வரும்படிகள் என்ற வகையாகவும் கொடுபடற்பாலதாக வரும் நாளன்று செலுத்துதல் வேண்டும்.

(4) நேரடிப் பங்குபற்றுநர் அல்லாதவர் எவரும் ஏனையோர் சார்பில் எழுத்திலில்லாத திறை சேரி முறிகளில் கொடுக்கல், வாங்கல்களைச் செய்தல் இயலாது. எழுத்திலில்லாத திறைசேரி முறிகளின் கைமாற்றமொன்றைச் செய்வதற்கு அல்லது கைமாற்றம் ஒன்றைப் பெறுவதற்கு விரும்புகின்ற வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் அல்லாத மற்றும் மத்தியவங்கி அல்லாத, எவரேனும் ஆள், வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவருக்கூடாக மட்டுமே அவ்வாறு செய்தல் வேண்டும்.

(5) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவரது கடமைகளையும், பணிகளையும் புரிவதற்கும் ஆற்றுவதற்கும் அவரது வாடிக்கையாளர்களுக்கு அவரது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் அவரை இயலச் செய்வதற்கு என ஒவ்வொரு வாடிக்கையாளர் தொடர்பிலான புத்தகங்களையும், பதிவேடுகளையும் பேணுதல் வேண்டுமென்பதுடன், அதன் சார்பில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகள் எவையேனும் இருப்பின் அவற்றுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(6) வாடிக்கையாளர் கணக்கொன்றில் வைத்திருக்கப்பட்ட எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் தொடர்பில் (3)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி மத்திய வங்கியிடமிருந்து கொடுப்பனவு என்ற வகையாக ஏதேனும் தொகையானது வணிகர் நேரடி பங்குபற்றுநரொருவரினால் பெறப்படுவதன் மேல், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர், அத்தகைய தொகையை, விடயத்திற்கேற்றால்போல வாடிக்கையாளருக்கு அல்லது சட்டத்தின் மூலம் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரும்

வாடிக்கையாளரும் திறத்தவராகவுள்ள எழுத்திலானவோர் உடன்படிக்கையின் நியதிகளின்படி, அத்தகைய கொடுப்பனவுக்கு உரித்துள்ள வேறெவரேனும் திறத்தவருக்கு, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புக்களில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுட் செலுத்துதல் வேண்டும்.

(7) வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவர் ஏதேனும் காரணத்துக்காக, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புக்களில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக (6) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வாடிக்கையாளர் ஒருவருக்கு அல்லது கொடுப்பனவுக்கு உரித்துள்ள திறத்தவர் ஒருவருக்கு கொடுப்பனவைச் செய்ய இயலாதிருக்கும் விடயத்தில், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர், அத்தகைய பணிப்புக்களில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான காலப்பகுதியினுள் செலுத்தப்படாது எஞ்சியுள்ள பணத்தொகையை மத்திய வங்கியின் விதித்துரைக்கப்பட்ட கணக்கொன்றுக்குக் கைமாற்றுதல் வேண்டுமென்பதுடன் விடயத்திற்கேற்ப, கொடுப்பனவு பற்றியும் வாடிக்கையாளர் அல்லது வேறு திறத்தவர் பற்றியும் மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய தகவலை மத்திய வங்கிக்கு அளித்தலும் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின் நியதிகளின்படி மத்திய வங்கியின் விதித்துரைக்கப்பட்ட கணக்கொன்றுக்குக் கைமாற்றப்பட்ட பணத்தொகைகள், அதற்கு உரித்துள்ள ஆட்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் , உரிமை கோரப்படாதிருக்கும் எவையேனும் பணங்கள் ஒழுங்குவிதிகள் மூலம் விதித் துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மத்திய வங்கியினால் கையாளப்படுதலும் அல்லது கையாண்டு நீக்கப்படுதலும் வேண்டும்.

(9) வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவர், அவரது அலுவலையும் நிருவாகத்தையும் தகுந்த முறையில் நடாத்துவதற்காகத் தேவைப்படு அளவுவரை தவிர, வாடிக்கையாளர் ஒருவர் தொடர்பில் பேணப்படும் ஏதேனும் கணக்குத் தொடர்பிலும் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பிலும் அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், ஒரு வாடிக்கையாளரின் கணக்குத் தொடர்பான ஏதேனும் தகவலை, மத்தியவங்கி தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு, வாடிக்கையாளரினால் அவ்வாறு செய்யும்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது நீதிமன்றக் கட்டளைமூலம் தேவைப்படுத்தப்பட்டாலொழிய, வெளிவிடுதலுமாகாது.

(10)வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், எழுத்திலான ஏதேனும் ஏற்புடைய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாக அத்தகைய வாடிக்கையாளரினால் எடுக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட எல்லாக் கைமாற்றங்கள் தொடர்பாகவும் வாடிக்கையாளர் ஒருவருக்கு முழுமையாகப் பொறுப்புடையவராதலும் மற்றும் பொறுப்புக்கு ஆளானவராதலும் வேண்டும்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஊ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும்பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:-

எழுத்திலில்லாத திறைசேரி முறிகளைக் கைமாற்றுதல்

21ஊ. (1) எழுத்திலில்லாத திறைசேரி முறிக்கான உரித்தொன்றின் கைமாற்றம் அல்லது அதன் சண்ணுள்ள அக்கறையின் கைமாற்றம் அல்லது அதன் சண்ணுள்ள அக்கறையின் கைமாற்றம், 21உ என்னும் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் கீழ் வாடிக்கையாளர் ஒருவருக்காகப் பேணப்படும் கணக கொன்றிலிருந்து அல்லது கணக்குக்கு வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் செய்யப்பட்டவிடத்து, அல்லது எவரேனம் வாடிக்கையாளரின் எழுத்திலில்லாத திறைசேரி முறியிலுள்ள அக்கறை பதியப்பட்டவிடத்து, அல்லது அத்தகைய அக்கறை தொடர்பில் ஏதேனும் திருத்தம் அல்லது வேறுபாடு செய்யப்பட்டவிடத்து அத்தகைய வணிகர் நேரடிப் பங்கு பற்றுநர், மத்திய வங்கியினால் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட பணிப்புக்களுக்குக்கிணங்க, அத்தகைய வாடிக்கையாளருக்கு உறுதிப்பாடொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய வைப்பகத்தில் பேணப்படும் எழுத்திலில்லாத பிணையங்கள் கணக்குகள் தொடர்பில் கூற்றுக்களை அல்லது உறுதிப்பாடுகளை வழங்குவதற்கு பணச்சட்டத்தின் நியதிகளின்படி எழுத்திலில்லாத பிணையங்களுக்கான வைப்பக வசதிகள் வழங்குநர்மீது சுமத்தப்படும் கடப்பாட்டை மதிப்புக் குறைப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது. அத்துடன் வைப்பகத்தினால் வழங்கப்பட்ட கூற்றுக்கும் அல்லது உறுதிப்பாட்டுக்கும் (1)ஆம் உட்பிரிவின்கீழ்

வழங்கப்பட்ட கூற்றுக்கும் உறுதிப்பாட்டுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், வைப்பகத்தினால் வழங்கப்பட்ட கூற்று அல்லது உறுதிப்பாடு மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உறுதிப்பாடானது கைமாற்றுவதற்குரியதாக இருத்தலாகாதென்பதுடன், அது எந்த எழுத்திலில்லாத திறைசேரி முறி தொடர்பானதோ அந்த எழுத்தில்லில்லாத திறைசேரி முறி தொடர்பானதோ அந்த எழுத்திலில்லாத திறைசேரி முறி தொடர்பில் அதனை வழங்கிய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கும் அது எந்த வாடிக்கையாளருக்குமிடையே வழங்கப்பட்டதோ அந்த வாடிக்கையாருக்குமிடையே மாத்திரம் கைமாற்றம் பற்றிய சான்றாகப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) மத்திய வங்கியானது இப்பிரிவின் கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவிப்பு, உறுதிப்பாடு, பெற்றுக் கொள்ளல் அல்லது பற்றுச்சீட்டு எழுத்தில்லில்லா வடிவத்தில் வழங்கப்படுவதனையும் மற்றும் அதன் சார்பில் மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புக்கள் மூலம் காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான, கம்பி, தொலைபேசி, செய்மதி, வடம் அல்லது அத்தகைய வேறு ஏதேனும் இலத்திரனியல், காந்த அல்லது கட்புல ஊடகங்கள் மூலம் அனுப்பப்படுவதனையும் அல்லது வழங்கப்படுவதனையும் அனுமதிக்கலாம்.

(5) எழுத்திலில்லாத திறைசேரி முறியொன்றின் இலத்திரனியற் பதிவேடு அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இலத்திரனியல் வடிவத்தில் வழங்கப்பட்ட அல்லது பேணப்பட்ட ஏதேனும் உறுதிப்பாடு, அறிவிப்பு, பெற்றுக் கொள்ளல், பற்றுச்சீட்டு அல்லது வேறு ஆவணம் அல்லது பதிவேடு என்பவற்றுக்கு அத்தகைய எழுத்திலில்லாத திறைசேரிமுறி இலத்திரனியல் வடிவத்தில் பேணப்படுகிறது அல்லது அத்தகைய உறுதிப்பாடு, அறிவிப்பு, பெற்றுக் கொள்ளல், பற்றுச்சீட்டு அல்லது வேறு ஆவணம் அல்லது பதிவேடு இலத்திரனியல் வடிவத்தில் வழங்கப்படுகின்றது அல்லது பேணப்படுகின்றது என்ற ஏதுவின்மீது மட்டுமே சட்டப்பயனோ, செல்லுபடியாந்தன்மையோ அல்லது வலுவுறத்தற்றன்மையோ மறுக்கப்படலாகாதென்பதுடன் அத்தகைய உறுதிப்பாடு, அறிவிப்பு, பெற்றுக் கொள்ளல், பற்றுச்சீட்டு அல்லது வேறு ஆவணம் அல்லது பதிவேடு 1995ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சான்று (சிறப்பேடுகள்) சட்டத்தின் IIஆம் பாகத்துக்கும் IIIஆம் பாகத்துக்கும் இணங்க ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் முன்னர் கணனிச் சான்றை அளித்தல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்துக்கும் இணங்க ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் முன்னரான வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக அளிக்கவும்படலாம்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்தவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ)ஒராமுட்பிரிவின் ஏற்பாடுகள், மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் பணிப்புக்களுக்கிணங்க முதனிலை வணிகர்களால் அல்லது ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களால், வாடிக்கையாளர்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கப்படும் திறைசேரி முறிகளை அங்கீகரிப்பதிலிருந்து பதிவாளரையோ அல்லது மத்திய வங்கியையோ தடைசெய்தல் ஆகாது.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்தவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2அ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் எழுத்திலில்லாத திறைசேரி முறிகள் இக் கட்டளைச் சட்டததின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கைமாற்றப்படுதல், அடைமானம் வைக்கப்படுதல், பாரபந்தத்துக்குட்படுத்தப்படுதல், கடனாகப் கொடுக்கப் படுதல், கடனாகப் பெறப்படுதல் அல்லது வேறு வகையாகக் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கப் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் கைமாற்றம், அடைமானம், பாரபந்தம், கடன்கொடுப்பனவு அல்லது கடன் பெற்றுக்கொள்ளுகை அல்லது வேறேதேனும் கொடுக்கல் வாங்கல், எழுத்திலான சான்றிதழ்களை என்ற வடிவத்தில் வழங்கப்பட்ட எழுத்திலில்லாத திறைசேரி முறிகளிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வேறேதேனும் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், செல்லுபடியுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தலும் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஆ பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் எவரேனும் ஆள், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப் பட்டதன் மேல் ஐந்த வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு கோடி ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது தவறானது எவரேனுமாளுக்கு பண வகையான நட்டத்தை அல்லது பணவகையான இலாபத்தை அல்லது பணப் பெறுமதியில் கணிக்கப்படற்பாலதான நட்டத்தை இல்லது இலாபத்தை விளைவித்துள்ளவிடத்து, அத்தகைய நட்டத்தின் அல்லது இலாபத்தின் பெறுமதியினது இருமடங்குக்குச் சமமானவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

"(3) மத்திய வங்கியானது, இச் சட்டத்தின் கீழான தவறொன்று எச் சூழ்நிலையில் புரியப்பட்டதென்பதைக் கருத்திற்கொண்டு ஐம்பது இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு பணத்தொகைக்காக அத்தகைய தவறை இணக்கலாம் அல்லது தவறானது எவரேனும் ஆளுக்குப் பணவகையான நட்டத்தை அல்லது பணவகையான இலாபத்தை அல்லது பணப் பெறுமதியில் கணிக்கப்படற்பாலதான நட்டத்தை அல்லது இலாபத்தை விளைவித்துள்ளவிடத்து, அத்தகைய நட்டத்தின் அல்லது இலாபத்தின் பெறுமதியினது ஒன்றரை மடங்குக்குச் சமமான பணத்தொகையொன்றுக்காக இணக்கலாம்.

(4) இப்பிரிவின் கீழ்த் தவறொன்றை இணக்குதலானது விடுவிப்பொன்றின் பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "வாடிக்கையாளர்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"வாடிக்கையாளர்" என்பது, வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் தொடர்பாக, அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் மூலம் எழுத்திலில்லாத திறைசேரி முறிகளை அல்லது அவற்றிலுள்ள அக்கறைகளைக் கொள்வனை செய்கின்ற அல்லது விற்பனை செய்கின்ற அல்லது வேறுவகையாகக் கொள்ளுகின்ற அல்லது கையாளுகின்ற அல்லது அத்தகைய முறியின் அல்லது அக்கறையின் சாத்தியமாகவுள்ள கொள்ளுதலுக்காக அல்லது கையாளுகைக்காக அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருடன் இணக்கப் பேச்சுவார்த்தை நடாத்துகின்ற எவரேனும் ஆள் என்று பொருளாகும் என்பதுடன், சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்குமிடத்து, அத்தகைய வாடிக்கையாளரின் அல்லது அத்தகைய வாடிக்கையாளரின் மரணச் சொத்தின் சட்டப் பிரதிநிதியை உள்ளடக்குதலும் வேண்டும்.".

(2) "வணிகருக்கிடையிலான தரகர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன்மூலம்:-

" பணச் சட்டம்" என்பது, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டம் என்று பொருளாகும் என்பதுடன், அதன்கண் அடங்கியுள்ள கருமங்கள் தொடர்பில் அதனை மாற்றீடு செய்கின்ற ஏதேனும் சட்டவாக்கத்தை உள்ளடக்குதலும் வேண்டும்; அத்துடன் அச்சட்டத்தில் அடங்கியுள்ள ஏதேனும் பிரிவு இக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பாகக் குறிப்பீடு செய்யப்பட்டவிடத்து, பின்னைய சட்டவாக்கத்திலுள்ள நேரொத்த பிரிவுகளை உள்ளடக்குவதாக எடுத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.".

" பிணையங்கள் கணக்கு" என்பது, பணச் சட்டத்தில் (422ஆம் அத்தியாயம்)அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2004ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, நிதி நிருவாக (திருத்தச்) சட்டம்

[2004ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 05ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கும்; 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தால் 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் VI இல்லாதொழிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், நிதிச் சட்டத்தின் பாகம் VI இன் நடைமுறைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2004ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

பொது

2. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டம் அச்சட்டத்தின் பாகம் IV (பிரிவுகள் 19 மற்றும் 20) என்பதனை நீக்கஞ் செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

பாகம் II

### 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VI இன் மீள் சட்டவாக்கம்

3. (1) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VI என்பதன் ஏற்பாடுகள் (பிரிவு 58முதல் 66வரை) 2002ஆம்ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VI என்பதன் ஏற்பாடுகளால் நீக்கஞ் செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து அத்தகைய ஏற்பாடுகள் இதன்கண் சட்டவாக்கம் செய்யப்பட்டிருக் கின்றாற்போன்று நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(2) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VI என்பதன் ஏற்பாடுகள் (பிரிவு 58 முதல் 66 வரை) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நடைமுறைக்கு வருவதன்மீது, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான சொல்லப்பட்ட சட்டத்தின் கீழான பாகம் VI தொடர்பில் ஆக்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும், அறிவிப்புக்களும், விதிகளும் அல்லது ஒழுங்கு விதிகளும் இச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பாகம் VI இன் ஏற்பாடுகளின் மீள், நடைமுறையினை அடுத்து அத்தகைய கட்டளைகள் அறிவிப்புக்கள், விதிகள் அல்லது ஒழுங்கு விதிகள் இதன்கீழ் சட்டவாக்கம் செய்யப்பட்டுள்ளமையைப் போன்று நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து மூன்றாம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டம் அதன் பாகம் VI என்பதில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அச் சட்டத்தின் 58ஆம் பிரிவில் –

(அ) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் :-

"(அ) இலங்கையிலுள்ள ஏதேனும் ஆதனத்தின் சொத்துவத்தின் உரித்துமாற்றம் எதுவும், விடயத் திற்கேற்ப ஏதேனும் நிர்வாக மாவட்டத்தில், பிரதேசச் செயலாளரின் பெரும்பாகத்தில் அல்லது கிராம அலுவலரின் பிரிவில் காணியின் தற்போதைய பெறுமதியை கருத்திற்கொண்டு காணி அமைச்சரினதும் பிரதான விலை மதிப்பீட்டாளரினதும் ஒருப்பாட்டுடன் நிதி அமைச்சரால் அதன் பொருட்டு ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய பெறுமதிக்குக் குறைவாக இலங்கைப் பிரசையொருவராக அல்லாத ஆளொருவருக்குப் பயனுறுத்தப்படுதலாகாது.";

(ஆ) அதன் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம்:-

"(3அ) கம்பனியொன்றுக்கு இலங்கையினுள் ஏதேனும் ஆதனத்தின் சொத்துவத்தை உரித்து மாற்ற விருக்குமிடத்து, அத்தகைய கம்பனியிலுள்ள வழங்கப்பட்ட பங்குகளின் இருபத்தைந்து சதவீதத்

திற்கும் அதிகமானவை இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்களினால் சொந்தமாகக் கொண்டிருக்கப்படுமாயின் அத்தகைய ஆதனத்தின் உரித்து மாற்றத்தைப் பெறுபவரிடமிருந்து அத்தகைய ஆதனத்தின் பெறுமதிக்குச் சமமானவாறான அத்தகைய தொகையினைக் கொண்ட வரியொன்று அறவிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) அதன் (4)ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியை நீக்கிவிட்டுப் பின்வரும் பந்தியை அதற்குப் பதிலாக இடுக:-

"(எ) அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளையினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வகுப்பினதான அல்லது விவரணத்தினதான ஆதனத்தின் உரித்து மாற்றத்துக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு, ஆட்கள் குழுவுக்கு அல்லது ஆட்களின் வகுதிக்கு ஆன உரித்து மாற்றத்துக்கு ஏற்புடைத்தாதலாகாது. அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அச் சட்டத்தின் 66ஆம் பிரிவை உடனடுத்து, அதன் 66அ என்னும் பிரிவாகப் பயனுறுவதாகிய பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்தவதன் மூலம்:-

66அ. (1) அமைச்சர், இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றுகின்ற அல்லது அவற்றைப் பயனுறுத்துகின்ற நோக்கங்களுக்காகவும் அத்துடன் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றிலில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்."

5. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2004ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (மன்னிப்பை ஒழுங்குபடுத்துதல்) சட்டம்

[2004ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 20ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**நீக்கஞ்செய்யப்பட்ட 2002ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும் 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும் நியதிகளின்படி 2003 ஒகத்து 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகள் தொடர்பில் வருமானவரி செலுத்தாமை அல்லது செலுத்துவதற்கான பொறுப்பை வெளியிடாமை தொடர்பில் ஒரு மன்னிப்பளித்தலை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்கஞ் செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*1. இச்சட்டம், 2004ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (மன்னிப்பை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2.(1) இச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.*

*(2) இச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் சட்டமாக்கப்படுவதற்கு உடன் முற்போந்த நாளன்று மேற்கூறப்பட்ட சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சட்டங்களின் நியதிகளின்படி ஏதேனும் வரியை, விதிப்பனவை, தண்டப்பணத்தை (ஏதேனும் தவறு தொடர்பிலான ஏதேனும் தண்டப்பணம் உட்பட) அல்லது குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கு அல்லது இழப்பித்தற்கு ஆளாயிருந்த எவரேனும் ஆள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது கொள்ளப்பட்ட ஏதேனும் உரிமை அல்லது சுதந்திரம் எது எவ்வாறிருப்பினும், அத்தகைய வரியின், விதிப்பனவின், தண்டப்பணத்தின் (ஏதேனும் தவறு தொடர்பிலான தண்டப்பணம் உட்பட) குற்றப்பணத்தின் கொடுப்பனவிற்கு அல்லது இழப்பிற்குத் தொடர்ந்தும் ஆளாதல் வேண்டும்.*

*3. (1) அப்போதைக்கு வலுவிலுள்ள வருமான வரிக்கொடுப்பனவு தொடர்பிலான சட்டங்களின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட போதிலும் 2002 மார்ச்சு 31ஆம் தேதிக்கு முந்திய ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் அத்தகைய வரிக்கான பொறுப்பை அல்லது 2002 மார்ச்சு 31ஆம் தேதியன்றுள்ளவாறு தமது வருமானத்தினதும் சொத்துக்களினது மூலவளத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்தியிராத ஆளொருவரும், அவர் இலங்கையிலிருப்பினுஞ்சரி, வெளிநாட்டிலிருப்பினுஞ்சரி அத்தகைய ஆள் வருமான வரிக் கொடுப்பனவுக்கான தமது பொறுப்பையும் அல்லது மேலதிகப் பொறுப்பையும் அத்துடன் 2002 ஏப்பிறல் 1ஆம் தேதியன்றுள்ளவாறு தமது வருமானத்தினதும் எல்லா மூலவளங்களையும் வெளிப்படுத்தி 2003 ஒகத்து 31ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்திருப்பின் அது இச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றாக கருதப்படுதலும் அத்துடன் அவருக்கு இச் சட்டத்தின் நியதிகளின்படி மன்னிப்பொன்று அளிப்படுதலும் வேண்டும் ;*

*ஆயினும் மேலே தரப்பட்டவாறு மன்னிப்பு அளிக்கையில் ஆணையாளர் தலைமையதிபதி அவரால் பெறப்பட்ட வெளிப்படுத்துகைகளின் செம்மையைச் சரிபார்த்தல் வேண்டுமென்பதுடன் வெளிப்படுத்தப்படாத வருமானம், வெளிப்படுத்தப்படாத சொத்துக்கள், வெளிப்படுத்தப்படாத வருமானத்தின் அல்லது மேலதிக வருமானத்தின் மூலங்கள், சொத்துக்கள் அத்துடன் வருமானத்தின் மூலங்கள், என்பன தொடர்பில் தகவலை வெளியிடுகின்ற வெளிப்படுத்துகையின் அத்தகைய பகுதி தொடர்பில் மாத்திரமே மன்னிப்பளித்தல் வேண்டும்.*

*(2) ஐமிச்சத்தைத் தவிர்ப்பதற்கு –*

*(அ)(i) இரண்டாயிரத்து இரண்டாம ஆண்டின் 7ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையானது 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 11ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் ; அத்துடன்*

(ii) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையானது இச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கவும்

இப்பிரிவின் ஏற்பாடுகள் எந்த வெளிப்படுத்துகைக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமோ அந்த வெளிப்படுத்துகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைப் பற்றிய குறிப்பீடு எதுவும் 2003ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் எனப் பொருள்படும் என்பதுடன் அதனை உள்ளடக்குதலும் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதன் பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதி ஆணையாளரின் பதவி வரிசைக்குக் குறையாத எவரேனும் அலுவலர், அவசியமானவிடத்து எந்த ஆட்களின் வெளிப்படுத்துகைகள் ஒப்பேற்கப்பட்டுள்ளனவோ அந்த ஆட்களை, மன்னிப்பு அளிக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பதனைத் தீர்மானிப்பதில் தமக்குதவும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான விவரங்களை அல்லது மேலதிக விவரங்களைத் தமக்குக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம். அவரிடமிருந்து அத்தகைய தகவல் கோரப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விவரங்கள் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

4.(1)(அ) இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இச் சட்டத்தின் 3ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிப்படுத்துநர் ஒருவரால் புரியப்பட்ட ஏதேனும் தவறுக்காக குற்ற வழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது என்பதுடன், வருமானவரியின் செல்வவரியின் அல்லது விடயத்துக்கேற்ப வருமான வரியின் அல்லது செல்வ வரியின் மீதான மிகை வரியின் விதிப்பனவுக்கு அது தொடர்பாக 3ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணையாளர் தலைமையதிபதியால் அளிக்கப்பட்ட மன்னிப்புத் தொடர்புபடுத்துகின்ற அளவுக்கு அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, எவரேனும் வெளிப்படுத்துனருக்கு எதிராக புலனாய்வு எதுவும் மேற்கொள்ளப்படுதலாகாது.

(ஆ) இச் சட்டத்தின் 3ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு வெளிப்படுத்துகையொன்றைச் செய்துள்ள ஆளெவரும் 2002 மார்ச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுறும் காலப்பகுதிக்கு, முன்னராக வெளிப்படுத்தப்பட்டிருக்காத வருமானம், சொத்துக்கள் அல்லது வருமான மூலங்கள் தொடர்பான ஏதேனும் வெளிப்படுத்துகை தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டப்பணத்துடன் சேர்த்து விடயத்துக் கேற்ப, ஏதேனும் வருமான வரியின் செல்வ வரியின் அல்லது வருமான வரி மீதான அல்லது செல்வவரி மீதான மிகையின் கொடுப்பனவிலிருந்து பாதிப்பின்மைக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

ஆயினும், தொழில்தருநர் எவரும் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து வருமான வரியின் கழிப்பனவுக்கு ஏற்புடைத்தான 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயம் XIV இன் அல்லது அதற்கு ஏற்புடைத்தான வேறேதேனும் முந்திய சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி மேலே (1) (அ) அத்துடன் (1)(ஆ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரியினதும் தண்டத்தினதும் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதலாகாது.

(2) ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அல்லது 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் வரியின், விதிப்பனவின் அல்லது தண்டப்பணத்தின் (ஏதேனும் தவறு தொடர்பான ஏதேனும் தண்டப்பணம் உட்பட) குற்றப்பணத்தின் அல்லது இழப்பின் சேகரிப்பையும் அறவீட்டையும் நிர்வகிக்கும் வேறு எவரேனும் அதிகார சபைக்கும்–

(அ) மேலே கூறப்பட்ட எந்தச் சட்டத்தின்கீழ் ஏதேனும் வரி, குற்றப்பணம், அல்லது தண்டப்பணம் ஏதேனும் தவறு தொடர்பான ஏதேனும் தண்டப்பணம் உட்பட விதிப்பனவு விதிக்கப்பட்டதோ, அந்தச் சட்டத்திற்கான அட்டவணையின் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பின்னர் பதிவழிக்கப்பட்ட, பொறுப்பு நீக்கப்பட்ட அல்லது வேறுவகையில அறவிடப்படாத அத்தகைய ஏதேனும் வரியை விதிப்பனவை அல்லது தண்டப் பணத்தை (ஏதேனும் தவறு தொடர்பிலான ஏதேனும் தண்டப்பணம் உட்பட) குற்றப்பணத்தை அல்லது இழப்பிப்பைச் சேகரிப்பதும், அறவிடுவதும்; அத்துடன்

(ஆ) அதனைச் செய்வதற்கான காலப்பகுதி கழிந்துவிட்டது என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் ஏதேனும் வரி, விதிப்பனவு அல்லது தண்டப் பணம் (ஏதேனும் தவறு தொடர்பிலான ஏதேனும் தண்டப்பணம் உட்பட) இழப்பித்தல் அல்லது குற்றப்பணம் மேற்கூறப்பட்ட சட்டத்திற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி பொறுப்பு நீக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது மீளளிக்கப்பட்டுள்ளவிடத்து 2002 மார்ச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் அல்லது வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு விடயத்திற்கேற்ப எவையேனும் வரி மதிப்பீடுகளை அல்லது வேறு எவையேனும் கட்டளைகளை வழங்குவது .

சட்டமுறையாதல் வேண்டும்.

(3) இச் சட்டத்தின் நியதிகளின்படி ஆளெவரும், அவரது வருமானம் அல்லது அதன் பாகம் தொடர்பில் அவ்வாறு வழங்கப்பட்ட மன்னிப்புக்கு அல்லது பாதிப்பின்மைக்கு உரித்துடையவராவர் என்ற நிகழ்வின் காரணமாக 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி அவரால் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட அல்லது கழிப்பனவு செய்யப்பட்ட ஏதேனும் பணம் தொடர்பில் ஏதேனும் மீளளிப்புக்கு உரித்துடையவராதலாகாது. அத்தகைய ஆளின் வெளிப்படுத்தப்படாத வருமானத்தின் தொகை அல்லது வெளிப்படுத்தப்படாத சொத்துக்களின் பெறுமதி ஏதேனும் அத்தகைய மீளளிப்பின் தொகையை ஆய்ந்தறியும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய ஆளினால் உரிமை கோரப்பட்ட ஏதேனும் மீளளிப்புக்கெதிராக எதிரீடு செய்யும் நோக்கத்திற்கு அல்லது அத்தகைய இழப்பிற்கெதிராக எதிரீடு செய்யும் நோக்கத்துக்கு ஆக வருமான வரியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கான அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் வரியின், விதிப்பனவின் அல்லது தண்டப்பணத்தின் (ஏதேனும் தவறு தொடர்பிலான ஏதேனும் தண்டப்பணம் உட்பட) குற்றப்பணத்தின் அல்லது இழப்பின் சேகரிப்பை அல்லது அறவீட்டை நிர்வகிக்கும் ஏதேனும் அதிகார சபையால் நடாத்தப்பட்டு வந்தவையும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி நிறுத்தப்பட்டுள்ளவையும், இடை நிறுத்தப்பட்டுள்ளவையும் அல்லது கைவாங்கப்பட்டுள்ளவையுமான ஏதேனும் நடவடிக்கை, புலனாய்வு அல்லது விசாரணை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து, அத்தகைய நடவடிக்கை, புலனாய்வு அல்லது விசாரணை அவ்வாறு நிறுத்தப்படவில்லை, இடைநிறுத்தப்படவில்லை அல்லது கைவாங்கப்படவில்லை என்றாற்போன்று உயிர்ப்பிக்கப்படுதல், மீளிடப்படுதல் அல்லது தொடரப்படுதல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் இச் சட்டத்தின் 3ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து வெயிப்படுத்துகையைச் செய்யும் ஆளின் ஆளடையாளம் அத்துடன் ஏதேனும் வெளிப்படுத்துகையில் அடங்கியுள்ள ஏதேனும் கருமம் அல்லது விடயம் தொடர்பாக முழுமையான இரகசியத்தைப் பேணுதலும் பேணுவதில் உதவுதலும் வேண்டும். 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 172ஆம் பிரிவின் கீழ் அத்தகைய இரகசியத்தின் மீறுகைக்கான தண்டனை உட்பட அலுவலகமுறையான இரகசியத்தின் பேணலுக்கு ஏற்புடைத்தான அத்தகைய சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும் இச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் வெளிப்படுத்துகையொன்றிற்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

6.(1) அமைச்சரானவர் இச் சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றிற்குப் பயனளிக்கும் நோக்கங்களுக்காகவும் அத்துடன் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அத்தகைய ஒழுங்கவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக் கூடிய வாறான விரைவில் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஒழுங்குவிதி எதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று எந்தத் தேதியன்று இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

7. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

8. இச் சட்டத்தின் சந்தர்ப்பம் வேறு வகையாகக் தேவைப்படுத்தினாலன்றி–

"சொத்துக்கள்" என்பது, அசைவற்ற ஆதனம், அசைவுள்ள ஆதனம், வங்கி மீதிகள், திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள், கால வைப்புக்கள் அல்லது பிணையம் அல்லது கடன்கள் என்ற வகையில் தரப்படும் வேறு ஏதேனும் வகையான வைப்பு மற்றும் பணம் அத்துடன் கையிலுள்ள காசு என்பவற்றை உள்ளடக்கும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது ஆட்களின் குழுமமொன்றையும் கம்பனியொன்றையும் அத்துடன் பங்காண்மையொன்றையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

"வருமானத்தின் மூலவளம்" என்பது பணம் என்ற வகையிலோ அல்லது வேறு ஏதேனும் வடிவிலோ பெறப்பட்ட ஏதேனும் வருமானத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

## 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டம்

[2004ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 28ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**2004ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளின் விளைவாந்தன்மையினவான குறித்த சில விதிப்பனவுகளையும் அறவீடுகளையும் சுமத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அதனோடு தொடர்புடையனவும் அதற்கு இடைநேர்விளைவானவையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1\. இச்சட்டம் 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

### பொருளாதாரச் சேவை விதிப்பனவொன்றை விதித்தல்

2.(1) இச் சட்டத்திற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட விகிதத்தின்படி 2004, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டு ஆண்டுக்காகவும், (இதனகத்துப் பின்னர் "இயைபான வரி மதிப்பீட்டு ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒவ்வோர் ஆளின் அல்லது பங்காண்மையின் செலுத்துதகு விற்பனை வரவின் ஒவ்வொரு பாகம் தொடர்பிலும், அந்த இயைபான வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு, இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக (இதனகத்துப் பின்னர்) சேவை விதிப்பன எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொருளாதாரச் சேவை விதிப்பனவொன்று அத்தகைய ஆளிடமிருந்தும் பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்;

ஆயின், முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சியாகவுள்ளதான எவரேனும் ஆளிடமிருந்து அல்லது ஏதேனும் பங்காண்மையிடமிருந்து 2004, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு அத்தகைய ஆளின் அல்லது பங்காண்மையின் செலுத்துதகு விற்பனவு வரவு தொடர்பில் சேவை விதிப்பனவு எதுவும் விதிக்கப்படுதலாகாது.

(2) உட்பிரிவு (1)இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஏதேனும் இயைபான வரிமதிப்பாண்டுக்கு என எவரேனும் ஆளிடமிருந்து அல்லது ஏதேனும் பங்காண்மையிடமிருந்து விதிக்கப்படற்பாலதான சேவை விதிப்பனவானது, அத்தகைய ஆளின் அல்லது பங்காண்மையின் அந்த இயைபான வரி மதிப்பீட்டாண்டுக்கான செலுத்தத்தகு மொத்த விற்பனவு, ஐந்துகோடி ரூபாவை விஞ்சினால் அத்துடன் விஞ்சினால் மாத்திரமே விதிக்கப்படுதல் வேண்டும்;

ஆயின், ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்கு என ஆளெவரிடமிருந்தும் அல்லது பங்காண்மையிடமிருந்தும் அறவிடற்பாலதான சேவை விதிப்பனவு எவ்விடயத்திலும் ஐந்து கோடி ரூபாவை விஞ்சுதலாகாது.

(3) இப்பிரிவில் -

"செலுத்தத்தகு விற்பனவு வரவு" எவரேனும் ஆள் அல்லது பங்காண்மை அத்துடன் ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டு ஆண்டு என்பன தொடர்பில், எந்த வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் அல்லது வேறெவரேனும் ஆளினால் அல்லது வேறேதேனும் பங்காண்மையினால் அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது நாளுக்கு உடன் முற்போந்த முப்பத்தாறு மாதங்களுக்குள்ளாக வருகின்றதானதொரு தேதியன்று விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் இலங்கையில் நேரடியாகவோ அல்லது ஒரு முகவர் ஊடாகவோ அல்லது அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முகவரூடாகவோ கொண்டு நடாத்தப்பட்டதான அல்லது பிரயோகிக்கப்பட்டதான, வர்த்தகச் செயற்பாடுகளான அந்த ஏதேனும் வியாபாரம் தொழில், உயர்தொழில் அல்லது வாழக்கைத்தொழில் தவிர்ந்த ஒவ்வொரு வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின், வாழ்க்கைத்தொழிலின் இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்கு உடன்முன்னரான வரிமதிப்பீட்டாண்டுக்கு உடன் முன்னரான வரிமதிப்பீட்டாண்டுக்கான விற்பனை வரவாகவுள்ள, கூட்டுமொத்த விற்பனை வரவு என்று பொருள்படும்; அத்துடன்

"விற்பனவு வரவு" ஏதேனும் வியாபாரம், தொழில், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலிலும் அத்துடன் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டும் தொடர்பில், ஆளினால் அல்லது பங்காண்மையினால் கொண்டும் நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் போக்கில் வரிமதிப்பீட்டாண்டில் முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் உள்ளபடி பெற்றுக்கொண்டாலும்சரி இல்லாவிட்டாலும்சரி பெறப்படற்பாலதான தொகையிலிருந்து -

(i) அத்தகைய மொத்தத் தொகையில், உள்ளடக்கப்பட்டதான அத்தகைய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் எந்தத் தொகை சேர் பெறுமதி வரியைக் குறித்து நிற்கின்றதோ அந்த ஏதேனும் தொகையை, ஆயின் எந்த ஆள் அல்லது பங்காண்மை அத்தகைய வியாபாரத்தை, தொழிலை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றாரோ அல்லது நடாத்துகின்றதோ அல்லது பிரயோகின்றாரோ அல்லது பிரயோகின்றதோ அந்த ஆள் அல்லது பங்காண்மை, அத்தகைய கொடுக்கல் வாங்களின்போது 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதாக, மொத்தத் தொகையிலிருந்து கழித்த பின்னரும்.

(ii) எந்த ஏதேனும் மூலதனச் சொத்துத் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 23ஆம் பிரிவின் கீழ் தேய்மானத்திற்கானதொரு கழிவு வழங்கப்பட்டதோ அந்த ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்ப்பிலிருந்தும் பெறப்பட்ட மொத்த வரும்படியைக் கழித்த பின்னரும்; அத்துடன்

(iii) முன்னைய இயைபான மதிப்பீட்டாண்டின் அத்தகைய வியாபாரத்தின், தொழிலின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் செலுத்தத்தகு விற்பனை வரவில் உள்ளடக்கப்பட்டிருந்த தொகையாகவிருக்கும் இயைபான வரிமதிப்பீட்டாண்டின்போது அத்தகைய வியாபாரத்தால், தொழிலால், உயர் தொழிலால் அல்லது வாழ்க்கைத் தொழிலால் உறப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடன் தொகையைக் கழித்த பின்னரும்

பெறப்படற்பாலதான மொத்தத் தொகையெனப் பொருள்படும்;

ஆயினும் -

(அ) வங்கியொன்றின் விடயத்தில் அதன் தொழில் நெறிமுறையின்போது வங்கியால் பெறப்பட்ட வட்டி, தள்ளுபடிகள், பங்கிலாபங்கள், செலாவணிச்சேவைக் கட்டணங்கள், தரகுகள், தரகுக்கூலி, அத்துடன் வேறு ஏதேனும் வருமானம் என்ற வகைளில் அல்லது அதன் காரணமாக அத்தகைய வங்கியின் பெறுமதிகள் அத்தகைய வங்கியின் மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளொருவரின் விடயத்தில் -

(i) ஆயுள் காப்புறுதி; அத்துடன்

(ii) வேலை நிறுத்தத்தால், கலவரத்தால், குடியியல் குழப்பத்தால் அல்லது பயங்கரவாதச் செயல்களினால் ஆன சேதங்களுக்கு அல்லது அழிவுக்கு எதிரானதும் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்பட்டதுமான காப்புறுதி.

தொடர்பில் பெறப்பட்டஅல்லது பெறப்படற்பாலதான காப்புறுதிக் கட்டுப்பணம் அத்தகைய காப்புறுதித் தொழிலின் மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்படாதிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

3. (1) ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்காக எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையினால் செலுத்தப்பட்ட ஏதேனும் சேவை விதிப்பனவுத் தொகையானது, (இதனகத்துப் பின்னர்) "முதலிற் கூறப்பட்ட இயைபான வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்காக அந்த ஆளினால் அல்லது பங்காண்மையினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து கழிக்கப்படலாம்.

(2) ஒராம் உட்பிரிவிற்கிணங்க அதன் கழிப்பனவின்பின் அத்தகைய சேவை விதிப்பனவின் மீதி ஏதேனும் இருப்பின், அம்மீதி (இதனகத்துப் பின்னர்) " முதலில் அடுத்துறும் இயைபான வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலில் கூறப்பட்ட இயைபான வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்கு, அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் செலுத்தப்படற்பாலதான இயைபான வருமான வரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவுக்கிணங்க, அதன் கழிப்பனவின் பின்னர், அத்தகைய சேவை விதிப்பனவின் மீதியில் ஏதேனும் மிச்சம் இருப்பின், அது (இதனகத்துப் பின்னர் இரண்டாவதாக அடுத்துறும் இயைபான வரிமதிப்பீட்டாண்டு எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலில் அடுத்துறும் இயைபான வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் இயைபான வரிமதிப்பீட்டாண்டு எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலில் அடுத்துறும் இயைபான வரிமதிபீட்டாண்டை உடனடுத்தவரும் இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான இயைபான வருமானவரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

(4) எந்தக் சூழ்நிலையிலும் -

(அ) கூட்டு மொத்தக் கழிப்பனவானது, அத்தகைய சேவை விதிப்பனவுத் தொகையை விட விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) (3)ஆம் உட்பிரிவிற்கிணங்க அதன் கழிப்பனவின் பின்னர் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மீதியில் மிஞ்சிய பகுதி ஏதேனும் இருப்பின், அது இரண்டாவதாக அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டை அடுத்துறும் ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காகவும், எவரேனும் ஆள் அல்லது பங்காண்மை தொடர்பிலும் அத்துடன் ஏதேனும் இயைபான வரிமதிப்பாண்டு தொடர்பிலும் -

"இயைபான செலுத்தப்படற்பாலதான வருமானவரி" என்னும் சொல்லமைப்பு அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் அல்லது வேறெவரேனும் ஆளினால் அல்லது பங்காண்மையினால் இந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டின் முதலாம் நாளுக்கு உடன் முற்போந்த முப்பத்தாறு மாத காலப்பகுதிக்குள்ளமையும் ஒரு தேதியில் எவ்வியாபாரம் தொழில், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் வர்த்தகச் செயற்பாடு தொடங்கியதோ அவ்வேதேனும் வியாபாரம், தொழில், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தவிர்ந்த ஒவ்வொரு வியாபாரத்தையும் தொழிலையும் உயர் தொழிலையும் அல்லது வாழ்க்கைத் தொழிலையும் கொண்டு நடாத்தும் அல்லது பிரயோகிக்கும் அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கான அந்த ஆளின் அல்லது பங்காண்மையின் கூட்டு மொத்த நியதிச்சட்ட வருமானமானது அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப் படற்பாலதான மொத்த வருமானவரியானது, அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கான அதே ஆளின் அல்லது பங்காண்மையின் நியதிச் சட்ட வருமானத்திற்கு எவ்விகிதாசாரத்தல் அமையுமோ அந்த விகிதா சாரத்தைக் கொண்ட தொகை எனப் பொருளாகும்; அத்துடன்

"செலுத்தப்படற்பாலதான மொத்த வருமானவரி" என்பது, அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் அல்ல பங்காண்மையின் வரிச்செலுத்தற்பாலதான வருமானத்திற்கு, உண்ணாட் டரசிறைச் சட்டத்திற்கான தோதான அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட வருமானவரி வீதப் பிரயோகத்தினால் நிச்சயிக்கப்பட்ட தொகை என்று பொருளாகும்.

4. ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் 3ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சேவை விதிப்பனவின் பகுதி மீளளிக்கப்படலாகாது.

5. ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கான சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலதாகும் ஆளொவ்வொருவரும் அல்லது ஒவ்வொரு பங்காண்மையும், அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டின் யூன் முதலாம் நாளுக்கு முன்பாக அத்தகைய விதிக்கப்படற்றகவு பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு முகவரியிடப்பட்டு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவிப்பானது, விடயத்திற்கேற்றாற்போன்று, அத்தகைய ஆளுக்கு அல்லது பங்காண்மைக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்தொதுக்கப்பட்ட வருமானவரிக்கோவை இலக்கத்தை அல்லது தனிப்பட்ட ஆளடையாள இலக்கத்தை வெளிப்படுத்தல் வேண்டும்.

ஆயின், 2004 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான வரிமதிப்பீட்டடாண்டின் விடயத்தில், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து முப்பது நாட்காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய அறிவித்தல் கொடுக்கப்படுதல் வேணடும்.

6. ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்தச் சேவை விதிப்பனவு எவரேனும் ஆள் அல்லது பங்காண்மை தொடர்பில் விதிக்கப்படற்பாலதோ அந்தச் சேவை விதிப்பனவு ஆனது, அத்தகைய ஆள் மீது அல்லது பங்காண்மைமீது வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் வரிமதிப்பீடு எதுவும் செய்யப்படவில்லை என்பது எவ் வாறிருப்பினும், அந்த வரிமதிப்பீட்டாண்டின் யூன் முப்பதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு, செத்தெம்பர் முப்பதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு திசெம்பர் முப்பத்தோராம் தேதியன்று, அல்லது அதற்கு முன்பு அத்துடன் மார்ச்சு முப்பத்தோராம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு ஆணையாளர் தலைமையதிபதியிடம் அவரால் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் நான்கு காலாண்டுத் தவணைப் பணங்களில் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய காலாண்டுத் தவணைப் பணம் ஒவ்வொன்றும் அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப் படற்பாலதான ஒரு காலாண்டுச் சேவை விதிப்பனவாதல் வேண்டும்;

ஆயின், 2004 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கி 2004 யூன் 30ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஏதேனும் பணத்தொகைச் செலுத்துவதற்கு ஆளானவரும் எந்த ஆளுக்கு 5ஆம் பிரிவிற்கான காப்பு வாசகத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத் தாகின்றவோ அத்தகையவருமான ஆள் எவரும், அத்தகைய பணத்தொகை 2004 செத்தெம்பர் 30ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படின் இப்பரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு, சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலதான ஆளொவ்வொருவரும் அத்துடன் பங்காண்மை ஒவ்வொன்றும் அதன் சார்பில் வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் தேவைப்படுத்தப்பட்டாலும்சரி அல்லாவிட்டாலும்சரி, அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்பு ஆணையாளர் தலைமையதிபியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் விபரங்களைக் கொண்டதும் விடயத்திற்கேற்றாற்போன்று அவரது அல்லது அதன் செலுத்தத்தகு விற்பனை வரவின் விபரத் திரட்டொன்றை வரிமதிப்பீட்டாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

8. சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலரான ஆள் ஒவ்வொருவரும் அல்லது பங்காண்மை ஒவ்வொன்றும் இச் சட்டத்தின் 7ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் கொடுத்துதவப்பட்ட செலுத்தத்தகு விற்பனை வரவின் விபரத்திரட்டை அத்தகைய பதிவேட்டுடன் இணக்குதலை இலகுவாக்கக் கூடியவாறான அத்தகைய விகிதத்தில் அத்தகைய ஆளினல் அல்லது பங்காண்மையினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படுகின்றதான ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

9. வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்குச் சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலரான அல்லது விதிக்கப்படற்பாலதாக உள்ள எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்காண்மை–

(அ) சேவை விதிப்பனவைச் செலுத்தியிராதவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்கு எந்தச் சரியான தொகை அத்தகைய பங்காண்மையினால் சேவை விதிப்பனவாகச் செலுத்தப்பட்டிருக்கவேண்டுமோ அந்தச் சரியான தொகையைவிடக் குறை வான தொகையொன்றைச் செலுத்தியுள்ளவிடத்து;

அத்தகைய வரிமதிப்பீட்டாளர், அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரது அபிப்பிராயத்தில் அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் சேவை விதிப்பனவாகச் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய சேவை விதிப்பனவுத் தொகையை மதிப்பீடு செய்து எழுத்திலான அறிவித்தல் மூலம் –

(அ) அத்தகைய இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு என அத்தகைய ஆள் அல்லது பங்காண்மை சேவை விதிப்பனவு எதனையும் செலுத்தாதுவிட்டிருப்பின் அந்த இயைபான வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்ட சேவை விதிபனவுத் தொகையை உடனடியாகச் செலுத்தும்படி; அல்லது

(ஆ) அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்குச் சேவை விதிப்பனவாக ஏதேனும் தொகையை அத்தகைய ஆள் செலுத்தியிருந்தால், அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் அந்த இயைபான

வரிமதிப்பீட்டாண்டுக்காக உள்ளபடியாகச் செலுத்தப்பட்டசேவை விதிப்பனவுத் தொகைக்கும், அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்ட சேவை விதிப்பனவுத் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தைச் செலுத்தும்படி,

அத்தகைய ஆளை அல்லது பங்காண்மையைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

10. ஆறாம் பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறான கொடுப்பனவைச் செய்வதற்கென குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்பு செலுத்தப்படாததான ஏதேனும் சேவை விதிப்பனவுத் தவணைப்பணம் அல்லது அதன் பாகம் தவணை தவறுகைக்காகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் சேவை விதிப்பனவைச் செலுத்த வேண்டியதான தவணை தவறுகையிலுள்ள எவரேனும் தனியாநொருவர், பங்காண்மையின் பங்காளர் ஒருவர், ஒரு கம்பனியின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் உட்பட வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றின் பணிப்பாளர், அல்லது வேறு முதன்மை அலுவலர் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்படாத குழு வொன்றின் பணிப்பாளர், அல்லது வேறு முதன்மை அலுவலர் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்படாத குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஓர் அலுவலர் இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ஒரு தவணை தவறுநராகக் கருதப்படுதல் வேண்டும்.

11. முறையே மேன் முறையீடுகள், வரிமதிப்பீடுகளின் முற்றாம் தன்மை, தவறான விபரத் திரட்டுக்களுக்கான தண்டம், தவறுகையில் உள்ள வரியும், அதற்குச் சேர்க்கப்பட்ட பணத்தொகையும், வரியை அறவிடுதல், நானாவிதமான கருமங்கள், மீள் கொடுப்பனவு, தண்டங்களும் தவறுகளும், நிருவாகமும் பொதுக் கருமங்களும் தொடர்பிலான உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயங்கள் XIX, XX, XXI,XXII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII என்பனவற்றின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் முறையே இச் சட்டத்தின் கீழான மேன் முறையீடுகள், வரி மதிப்பீடுகளின் முற்றாந்தன்மை, தவறான விபரத் திரட்டுகளுக்கான தண்டம், தவறுகையிலுள்ள சேவை விதிப்பனவும் அதற்குச் சேர்க்கப்பட்ட பணத்தொகைகளும், சேவை விதிப்பனவுகளை அறவிடல் நானாவித கருமங்கள், மீள் கொடுப்பனவு தண்டங்களும் தவறுகளும் நிருவாகமும் பொதுக் கருமங்களும் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

12. இச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய -

"முகவர்". "தேய்மானத்திற்கான கழிவு" அத்துடன் "வரி மதிப்பீட்டாளர்" என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அந்தந்தப் பொருளைக் கொண்டிருத;தல் வேண்டும்;

"முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சி" என்பது எந்தத் தொழில் முயற்சியுடன் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கையின் முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையினால் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப்படுகின்றதோ அந்த ஏதேனும் தொழில் முயற்சி என்னும் பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தொழில்", "மூலதனச் சொத்து", "ஆணையாளர் தலைமையதிபதி", "கையுதிர்த்தல்" என்பன முறையே உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆணையாளர் தலைமையதிபதி", "பிரதி ஆணையாளர்" என்பவை உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது, 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருள்படும்.

"பங்காண்மை", "வரும்படிகள்" அத்துடன் "இலாபங்கள்" "வருமானம்" என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது கம்பனியொன்றை அல்லது ஆட்கள் குழுவை உள்ளடக்கும். ஆனால், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சங்கம் எதனையும் உள்ளடக்காது;

"நியதிச்சட்ட வருமானம்", "வரிவிதிக்கற்பாலதான வருமானம்", "வியாபாரம்", "வரிமதிப்பீட்டாண்டு" என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், எல்லா நோக்கங்களுக்காகவும், 2004 ஏப்பிறல் 1ஆம் தேதி நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச் சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளுக்கு இணங்கச் சேவை விதிப்பனவாக, 2004 ஏப்பிறல் இல் தொடங்கி இச்சட்டம் தொடங்குகின்ற தேதியன்று முடிவடைகின்றதான காலப்பகுதியின்போது ஆணையாளர் தலைமையதிபதியினால் ஏதேனும் தொகை சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு சேகரிக்கப்பட்ட சேவை விதிப்பனவானது, செல்லுபடியானதாக விதிக்கப்பட்டு அறவிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேவை விதிப்பனவுச் சேகரிப்புத் தொடர்பான ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிலிருந்து ஆணையாளர் தலைமையதிபதி இத்தால் நட்டோத்தரவாதமும் அளிக்கப்படுகின்றார்.

பாகம் II

## செலூலர் செல்லிடத் தொலைபேசிச் சந்தாதாரர் அளவீடு சுமத்துதல்

14. (இதனகத்துப்பின்னர் "பயன்கொளி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செலூலர் செல்லிடத் தொலைபேசியொன்றைப் பயன்படுத்தும் ஆளொவ்வொருவரிடமிருந்தும், 2004 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஆண்டு ஒவ்வொன்றிற்கும், செலூலர் செல்லிடத் தொலைபேசிச் சந்தாதாரர் "அறவீடு" என அழைக்கப்படும். (இதனகத்துப்பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறவீடொன்று 15ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு ஒவ்வொரு மாதம் தொடர்பாகவும் அத்தகைய செலூலர் செல்லிடத் தொலைபேசிப் பயன்கொளிக்கு செல்லிடத் தொலைபேசி இயக்குநரால் வழங்கப்பட்ட சேவைகளின் பெறுமானத்தின்மீது அல்லது வழங்கப்படும் எதிர்காலச் சேவைகள் மீது இரண்டரைச் சதவீதத்தில் கணிக்கப்பட்டுவிதித்து அறிவிடப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், எந்த ஒழுங்கமைப்புக்கு அல்லது தனியாளுக்கு, 1996 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகின்றதோ அந்த ஒழுங்கமைப்பு, எதுவும் அல்லது ஆள் எவரும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அறவீட்டைச் செலுத்தும்படி தேவைப்படுத்தப்படுதலாகாது.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "வழங்கப்பட்ட சேவைகளின் பெறுமானம்" என்பது, 2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதிச் சட்டத்தில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

15. பதினான்காம் பிரிவின்கீழ் செலுத்தற்படற்பாலதான அறவீடானது, 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புகள் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் உரிமம் பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையின் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவிடம் 2004 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு மாதத்தின் முடிவிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாக ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விபரங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படுதல் வேண்டும்.

16. பிரிவு 15இன் நியதிகளின்படி ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அரசாங்கத்தின் சார்பாக ஆணைக்குழுவினால் சேகரிக்கப்படும் அறவீடானது, 15ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவீட்டைப் பெற்றுக் கொண்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாகத் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

17. திறைசேரிக்கான செயலாளர், அரசாங்கத்தின் சார்பில் அறவீட்டைச் சேகரித்து அனுப்புதல் தொடர்பிலான வழிகாட்டு நெறிகளைக் காலத்துக்குக் காலம் வழங்கலாம்.

18. (1) எந்த எவரேனும் உரிமம்பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குநர் அத்தகைய இயக்குநரால் வழங்கப்பட்ட சேவைகளின் பெறுமானத்தின்மீது வருமதியாகவுள்ள முழு அறவீட்டுத் தொகையையும் 14ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு செலுத்தத் தவறுகின்றாரோ அந்த உரிமம் பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குநர் எவரும் தவணைதவறுநர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தவணை தவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து, பணிப்பாளர் சபையின் தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் பணிப்பாளர் அல்லது முதன்மை அலுவலர் இச் சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ஒரு தவணை தவறுநராகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்பு செலுத்தப்படாததான அத்தகைய அறவீடும் தவணை தவறியதொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தவணைதவறுநரானவர், தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுடன் சேர்த்து பின்வருமாறு கணிப்பிடப்பட்ட மிகையிறுப்பனவொன்றையும் செலுத்துதல் வேண்டும் -

(அ) 15ஆம் பிரிவின்கீழான அறவீட்டுக் கொடுப்பனவுத் தேதியிலிருந்து அடுத்துறும் ஒரு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பகுதிக்கு என தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் பத்து சதவீதப்படி; அத்துடன்

(ஆ) கொடுப்பனவுக்கான உரிய தேதியிலிருந்து அடுத்துறும் ஒருமாத காலப்பகுதிக்கு ஒவ்வொன்றுக்கும் அல்லது அதன் ஏதேனும் ஒரு பாககத்திற்குத் தவணை தவறுகையில் உள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் இரண்டு சதவீதத்தின்படி.,

ஆவதுடன் அந்த மிகையிறுப்பனவானது ஆணைக் குழுவினால் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குத் தவணை தவறுகையிலுள்ளதான ஏதேனும் அறவீட்டை, அதன்மீது திரண்டுள்ள மிகையிறுப்பனவுத் தொகையுடன் சேர்த்து இதனகத்துப் பின்னர் குறித்துரைக்கப்படக் கூடியவாறான விதத்தில் மீளப்பெறுவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, தவணை தவறுகயைிலுள்ள அறவீட்டை அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுடன் ஒன்றுசேர்த்து மீளப் பெறுவதற்கு எவையேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னதாக இப்பரிவின், இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை மீளப் பெறு வதற்காகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதான ஆணைக்குழுவின் முன்னம்பற்றித் தவணை தவறுநருக்குத் தெரியப்படுத்துகின்ற அறிவித்தல் ஒன்றை அவருக்கு வழங்கச் செய்வித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் நியதிகளின்படி தவணைதவறுநர் மீது ஆணைக்குழு அறிவித்தலை வழங்கி, ஆனால் தவணை தவறப்பட்ட தொகை அதன் மீதான மிகையிறுப்பனவுடன் சேர்த்து அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட மூன்றுவார காலப்பகுதி கடந்தபோதும் செலுத்தப்படாதிருக்குமிடத்து, ஆணைக்குழுவானது, இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான கொடுப்பனவைச செய்வதில் பெயர் குறிக்கப்பட்ட ஆள் தவணை தவறியுள்ளார் என்ற பொருள்பட்ட கூற்றொன்றுடன் சேர்ந்ததான தவிசாளரின் கைப்பட வழங்கப்பட்ட தவணை தவறியவரின் பெயரையும் முகவரியையும் தவணை தவறுகையிலுள்ள மொத்தத் தொகையையும் கொண்ட சான்றிதழொன்றை, எந்தப் பிரிவில் தவணை தவறுநர் வதிகின்றாரோ அந்தப் பிரிவில் நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும். தவணை தவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து சான்றிதழானது தவிசாளரின் பணிப்பாளர் சபையினரின் அத்துடன் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் பெயரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) நீதிவான் (5)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன்மேல், குறித்துரைக்கப்பட வேண்டியதானதொரு தேதியன்று தமக்கு முன்பு தோன்றும்படியும் அறவீட்டுத் தொகையை அதன்மீது ஒன்றுசேர்ந்த மிகையிறுப்பனவுடன் சேர்த்து மீளப் பெறுவதற்கு அவருக்கெதிராக நடிவடிக்கை எடுக்கப்படுதலாகாது என்பதற்கான ஏதுவைக் காட்டும்படியும் தவணை தவறுநரைத் தேவைப்படுத்தி அழைப்பாணையொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும். காட்டப்படும் ஏது கொடுப்பனவு செய்யப்படாமைக்கான காரணத்தை விளைக்கக்கூடிய அளவுக்குப் போதுமானதல்லவென நீதிவானுக்குத் தோன்றுமிடத்து, நீதிவான், அதனைப் பதிவுசெய்தபின் நீதிவானால் விதிக்கப்பட்டதொரு குற்றப்பணம் என்றாற்போன்று, தவணை தவறுநரிடமிருந்து தவணை தவறுகையிலான அற வீட்டுத் தொகையை அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுடன் சேர்த்து மீளப் பெறுவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு மீளப் பெறப்பட்ட பணம் ஆணைக்குழுவிடம் செலுத்தப்படுதல் வேண்டும். அது அதனைத் திரட்டு நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும்.

19. இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2004 சனவரி 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

20. உரிமம்பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குநர் எவராலும் 2004 சனவரி 1ஆம் தேதி தொடக்கம் இச் சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியின்போது எவரேனும் பயன்கொளியிடமிருந்து சேகரிக்கப்பட்டதான அறவீட்டுத்தொகை அவ்வாறு செல்லுபடியாக விதித்து அறவிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இயக்குநர், அத்தகைய அறவீட்டுச் சேகரிப்புத் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிலிருந்து இத்தால் நட்டோததரவாதம் அளிக்கவும்படுகிறார்.

பாகம் III

## சர்வதேசத் தொலைத் தொடர்பு இயக்குநர்கள் அறவீடு விதிப்பு

21. (1) ஆணைக்குழுவிடமிருந்து, எந்த ஆள் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமத்தைப் பெறுகின்றாரோ (அவர் இதனகத்துப் பின்னர் "உரிமங்கொளி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) அந்த ஆளொவ்வொருவரிடமிருந்தும் பஞ்சாங்க மாதம் ஒவ்வொன்றின்போதும் உள்வரும் அத்துடன் வெளிச்செல்லும் சர்வதேச அழைப்புக்களின் நிமிட எண்ணிக்கை தொடர்பிலும் (இதனகத்துப் பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேச இயக்குநர்கள் அறவீடொன்று இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்தில் விதிக்கப்பட்டு அறவீடு செய்யப்படுதல் வேண்டும்;

ஆயின், இப்பிரிவின் நோக்கங்களுக்காக "சர்வதேசத் தொலைத் தொடர்பு இயக்குநர்கள்" என்பது 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புகள் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் சர்வதேசத் தொலைத் தொடர்பு சேவைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கென உரிமம்பெற்ற எவரேனும் இயக்குநர் எனப் பொருள்படுதல் வேண்டும்;

ஆயின், மேலும் 2003 மார்ச்சு 3ஆம் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதிக்குச் செலுத்தப்படற்பாலதான இயக்குநர்கள் அறவீடு, 26ஆம்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும்வரை பின்வரும் வீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும் -

(அ) 2003 மார்ச்சு 3ஆம் தேதி தொடங்கி 2004 மார்ச்சு 31ஆம் தேதி முடிவடைகின்ற காலப்பகுதியின் போது உள்வரும் சர்வதேச அழைப்பின் காலப்பகுதியின் ஒரு நிமிடத்துக்கு அமெரிக்க ஐக்கிய அரசுகள் டொலரில் பதினொரு சதமும் வெளிச் செல்லும் சர்வதேச அழைப்புக்களின் காலப்பகுதியின் நிமிடமொன்றுக்கு இலங்கை நாணயத்தில் ரூபா நான்கு சதம் நாற்பது என்னும் வீதப்படி; அத்துடன்

(ஆ) 2004 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் இரண்டாம் ஆண்டின்போது, உள்வரும் சர்வதேச அழைப்பின் காலப்பகுதியின் நிமிடமொன்றுக்கு அமெரிக்க ஐக்கிய அரசுகள் டொலரில் ஒன்பது சதமும் வெளிச் செல்லும் சர்வதேச அழைப்புக்களின் காலப்பகுதியின் நிமிடமொன்றுக்கு இலங்கை நாணயத்தில் ரூபா மூன்று சதம் தொண்ணூறு என்ற வீதப்படி,

(2) கொடுப்பனவைப் பயனுறுத்தும் நோக்கத்திற்காக ஏதேனும் கொடுப்பனவு, அமெரிக்க ஐக்கிய அரசு டொலரிலிருந்து இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படவுள்ளவிடத்து, எந்த நாளன்று கொடுப்பனவு செய்யப்பட்டதோ அந்த நாளுக்கு முந்திய நாள் இலங்கை மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்பட்டவாறான விற்பனவு மாற்றுவீதம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். இந்த மாற்றுவீதம் இலங்கை மத்திய வங்கி இணையத்தளத்தில் கிடைக்கத்தக்கதாக வுள்ளது. அந்தக் கொடுப்பனவுகள் முன்னைய காலப்பகுதிகள் தொடர்பில் செலுத்தப்படும் பட்சத்தில் அக்காலப் பகுதிக்கான விற்பனை வீதத்தின் சராசரியானது பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

22. (1) இயக்குநர்கள் அறவீடு, 2003 மார்ச்சு 3ஆம் தேதியில் பயனுறும் வகையில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், உரிமங்கொளியான இயக்குநரொருவரால் வசதியளிக்கப்பட்டிருக்கும் உள்வரும் அத்துடன் வெளிச்செல்லும் ஒவ்வொரு சர்வதேச அழைப்பினதும் காலப்பகுதி மீதும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதங்களில் கணிப்பிடப்படுதலும் வேண்டும்;

ஆயின் அமைச்சரானவர் -

(அ) பெரும்பாலான தொலைத் தொடர்பு இயக்குநர்கள் உரிமங்கொளிகளால் வீதங்களை மீளாய்வு செய்யும்படி வேண்டி அவருக்குச் செய்யப்படும் எழுத்திலான கோரிக்கை ஏதேனும் இருப்பின் அதனை ; அல்லது

(ஆ) உண்ணாட்டு, சர்வதேசத் தொலைத் தொடர்புச் சந்தையில் நிலவும் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு,

இப்பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியில் தரப்பட்ட வீதத்தைக் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தலாம்.

(2) ஓர் உரிமங்கொளியால் 2003 மார்ச்சு 3ஆம தேதியன்று தொடங்கி 2004 மார்ச்சு 31ஆம் தேியன்று முடிவடையும் காலப்பகுதிக்குச் செலுத்தப்படற்காலதான இயக்குநர்கள் அறவீடு இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஒருமாத காலப்பகுதிக்குள்ளாக செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் தேதியில் இருந்து தொடங்கும் மாதம் ஒவ்வொன்றிற்கும் செலுத்தப்படற்பாலதான இயக்குநர்கள் அறவீடு ஒவ்வொரு மாத முடிவிலிருந்தும் முப்பது வேலை நாட்களுக்குள்ளாக, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் விவரங்களுடன் சேர்த்து ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவுக்கு (2)ஆம் (3)ஆம் உட்பிரிவுகளின்கீழ் செலுத்தப்பட்ட, ஏதேனும் அறவீட்டை செலவீடு செய்யும் முறையையும் விதத்தையும் நோக்கத்தையும் விதித்துரைக்கும் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம்.

23. ஆணைக்குழுவானது, இச் சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டு நெறிகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்கலாம்.

24.(1) எந்த எவரேனும் சர்வதேசத் தொலைத்தொடர்பு இயக்குநர், அத்தகைய இயக்குநரால் வழங்கப்பட்ட சேவைகளின் பெறுமானத்தின்மீது வருமதியாகவுள்ள முழு அறவீட்டுத் தொகையையும் 21ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளாறு செலுத்தத் தவறுகின்றாரோ அந்த சர்வதேசத்தொலைத்தொடர்பு இயக்குநர் எவரும் தவண தவறுநரொருவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து, பணிப்பாளர் சபையின் தவிசாளர் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அத்தகைய குழுவின் எவரேனும் பணிப்பாளர் அல்லது முதன்மை அலுவலர், இச் சட்டத்தின் இப் பாகத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறுநரொருவராகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்பு செலுத்தப்படாததான அத்தகைய அறவீடும் தவணை தவறியதொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தவணை தவறுநரானவர் தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுடன் சேர்த்து பின்வருமாறு கணிப்பிடப்பட்ட மிகையிறுப்பனவொன்றையும் செலுத்துதல் வேண்டும்:-

(அ) ஒரு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பகுதிக்குத் தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் பத்து சதவீதப்படி; அத்துடன்

(ஆ) அடுத்துறும் ஒருமாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பகுதிக்குத் தவணை தவறுகையில் உள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் இரண்டு சதவீதப்படி,

ஆவதுடன் அந்த மிகையிறுப்பனவு ஆணைக்குழுவினால் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குத் தவளை தவறுகையிலுள்ளதான ஏதேனும் அறவீட்டை, அதன்மீது திரண்டுள்ள மிகையிறுப்பனவுத் தொகையுடன் சேர்த்து, இதனகத்துப்பின்னர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான விதத்தில் மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) ஆணைக் குழுவானது தவணை தவறுகையிலுள்ள அறவீட்டை அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுடன் சேர்த்து மீளப் பெறுவதற்கு எவையேனும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னதாக, இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை மீளப் பெறுவதற்காகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதான ஆணைக்குழுவின் முன்னம் பற்றித் தவணை தவறுநருக்குத் தெரியப்படுத்துகின்ற அறிவித்தல் ஒன்றை அவருக்கு வழங்கச் செய்வித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் நியதிகளின்படி, தவணை தவறுநர்மீது ஆணைக்குழு அறிவித்தலை வழங்கி, ஆனால் தவணை தவறப்பட்ட தொகை அதன் மீதான மிகையிறுப்பனவுடன் சேர்த்து, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட மூன்று வாரக் காலப்பகுதி கடந்தபோதும் செலுத்தப்படாதிருக்குமிடத்து, ஆணைக்குழுவானது இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான கொடுப்பனவைச் செய்வதில், பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் தவறியுள்ளார் என்ற பொருள்பட்ட கூற்றுடன் சேர்ந்ததான தவிசாளரின் கைப்பட வழங்கப்பட்ட தவணை தவறியவரின் பெயரையும் முகவரியையும் தவணை தவறுகையிலுள்ள மொத்தத் தொகையையும் கொண்ட சான்றிதழொன்றை, எந்தப் பிரிவில் தவணை தவறுநர் வதிகின்றாரோ அந்தப் பிரிவில் நியாயாதிக்கம் கொண்ட, நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும். தவணை தவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து, சான்றிதழானது தவிசாளரின், பணிப்பாளர் சபையினரின் அத்துடன், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் பெயரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) நீதிவான்(5)ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன்மேல், குறித்துரைக்கப்பட வேண்டியதானதொரு தேதியன்று, தமக்கு முன்பு தோற்றும்படியும் அறவீட்டுத் தொகையை அதன்மீது ஒன்று சேர்ந்த மிகையிறுப்பனவுடன் சேர்த்து மீளப் பெறுவதற்கு ஏன் அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுதலாகாது

என்பதற்கான ஏதுவைக் காட்டும்படியும் தவணை தவறுநரைத் தேவைப்படுத்தி அழைப்பாணையொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும். காட்டப்படும் ஏது கொடுப்பனவு செய்யப்படாமைக்கான காரணத்தை விளக்கக் கூடிய அளவுக்குப் போதுமானதல்லவென நீதிவானுக்கு தோன்றுமிடத்து, நீதிவான், அதனைப் பதிந்த பின்னர் நீதிவானால விதிக்கப்பட்டதொரு குற்றப்பணம் என்றாற்போன்று தவணை தவறுநரிடமிருந்து தவணை தவறுகையிலான அ வீட்டுத் தொகையை அதன்மீது திரண்ட, மிகையிறுப்பனவுடன் சேர்த்து மீளப் பெறுவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு மீளப் பெறப்பட்ட பணம் ஆணைக்குழுவிடம் செலுத்தப்படுதல் வேண்டும். அது அதனைத் திரட்டு நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும்.

25. (1) எந்த ஆள் -

(அ) இச்சட்டத்தின் இந்த ஏற்பாடுகளில் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் எதனையும் மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது

(ஆ) இப்பாகத்தின் கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் அல்லது கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது

(இ) இப் பாகத்தின் நியதிகளின்படி தகவலைக் கொடுத்துதவும்படியான ஏதேனும் தேவைப்பாட்டின் கீழ் அறிந்துகொண்டே ஏதேனும் பொய்யான தகவலைக் கொடுத்தவுகின்ற அல்லது கொடுத்துதவச் செய்கின்ற,

ஒவ்வோர் உரிமங்கொளியும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச் சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்கு ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்டிருக்குமிடத்து,

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது அலுவலரும்; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழுவானது, குழுமம் ஒன்றாயின் அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அத்தகைய பணிப்பாளர், அலுவலர் எவரும் அல்லது குழுமத்தின் பங்காளர், அவர் அத்தகைய தவறானது அவருக்குத் தெரியாமல் புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறுபுரிகையை தடுப்பதற்கு உரிய விழிப்புக் கவனத்தை அவர் பிரயோகித்துள்ளார் என எண்பிப்பாராயின் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

26. (1) அமைச்சர், இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனளிக்கும் நோக்கத்திற்காகவும் இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் ஏதேனும் விடயம் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம்.

(அ) ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் அறவீடு, செலவீடு செய்யப்பட வேண்டிய முறையும், விதமும்

(ஆ) ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் அறவீடு எந்த நோக்கங்களுக்காக செலவீடு செய்யப்படவுள்ளதோ அந்த நோக்கங்கள்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக் கூடியவாரான அத்தகைய பிந்திய தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வசதிப்படக்கூடியவாறான விரைவில்

அதன் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

27. (1) இச் சட்டத்தின் இப் பாகத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2003 மார்ச்சு 3ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) சர்வதேசத் தொலைத் தொடர்பு இயக்குநர் எவராலும், 2003 மார்ச்சு 3ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது எவரேனும் பயன்கொளியிடமிருந்து விதிக்கப்பட்டுச் சேகரிக்கப்பட்ட அறவீட்டுத் தொகையானது அவ்வாறு செல்லுபடியாக விதிக்கப்பட்டு அறவிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இயக்குநர் அத்தகைய அறவீட்டுச் சேகரிப்புத் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிலிருந்தும் இத்தால் நட்டோத்துரவாதம் அளிக்கப்படுகின்றார்.

28. ஐமிச்சத்தைத் தவிர்ப்பதற்கு, எந்த சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநருக்கு இப்பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்றனவோ அந்த சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநர் எவரும் –

(அ) 2003 மார்ச்சு 3ஆம் தேதியன்று தொடங்கி 2004 மார்ச்சு 31ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதி தொடர்பில் அவரால் உள்ளவாறாகவே செலுத்தப்பட்டுள்ள தொகையாகிய ஐக்கிய அரசுகள் டொலர் சதம் ஏழு தசம் இரண்டிற்கும் மேற்படி பிரிவின் நியதிகளின்படி அவரால் செலுத்தற்படற்பாலதான ஐக்கிய அரசுகளின் டொலர் சதம் பதினொன்றுக்கும் இடையிலான வித்தியாசத்தையும்: அத்துடன்

(ஆ) 2004 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கி இச் சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடையும் இரண்டாம் ஆண்டு தொடர்பில் அவரால் உள்ளவாறாகவே செலுத்தப்பட்டுள்ள ஐக்கிய அரசுகள் டொலர் சதம் ஐந்து தசம் இரண்டிற்கும் (5.2) மேற்கூறப்பட்டபிரிவின் நியதிகளின்படி அவரால் செலுத்தப்படற்பாலதான ஐக்கிய அரசுகள் டொலர் சதம் ஒன்பதுக்கும் இடையிலான வித்தியாசத்தையும் செலுத்துவாராயின்,

விடயத்திற்கேற்ப 21ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் காப்பு வாசகத்தின் (அ) என்னும் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்.

பாகம் IV

## 2003ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்திற்கான திருத்தங்கள்

29. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 25ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II அதன் II ஆம் பிரிவின் "சுற்றுலா அபவிருத்தி அறவீடு என அழைக்கப்பட வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"சுற்றுலா அபிவிருத்தி அறவீடு" என அழைக்கப்பட வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும்; அத்தகைய அறவீடு, 1968 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் பிரயாண முகவரொருவராக உரிமம் பெற்றவரான எவரேனும் பொது விற்பனை முகவரின் மொத்த விற்பனை வரவின்மீது, 2004 சனவரி 1ஆம் தேதியிலிருந்து விதிக்கப்படுதலாகாது.".

என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

30. இச் சட்டத்தின் இப் பாகத்தின் ஏற்பாடுகள் 2004 சனவரி 1ஆம் சனவரி 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

31. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2004ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2004ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச் சட்டமானது, 2004ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, சேர் பெறுமதி சரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் -

(அ) "விடயத்திற்கேற்ப" என்பதிலிருந்து அதன் (11)ஆம் உட்பந்தியின் முடிவுரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம்;

"விடயத்திற்கேற்ப" வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் மீது பின்வரும் விதங்களில் அமையலாம்:-

(i) 2002 ஒகத்து 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2004 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு -

(அ) சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களைத் தவிர வரி விதிக்கப்படற்பாலதான இரண்டாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களினதும் சேவைகளினதும் பெறுமதியின்மீது பத்துச்சதவீதப்படி (இதன் வரிப் பின்னம் 1/11 ஆகும்)

(ஆ) சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களைத் தவிர வரிதிக்கப்படற்பாலதான வேறு எல்லாப் பண்டங்களினதும் சேவைகளினதும் பெறுமதியின்மீது இருபது சதவீதப்படி (இதன் வரிப்பின்னம் 1/6 ஆகும்)

(ii) 2004 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு சைவர் வீதப்படி வரிவிதிக்கப் படற்பாலதான அத்தகைய பண்டங்களையும் சேவைகளையும் தவிர விடயத் திற்கேற்ப வழங்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பண்டங்களினதும் சேவைகளினதும் பெறுமதியின்மீது பதினைந்து சதவீதப்படி (இதன் வரிப் பின்னம் 3/23 ஆகும்).". அத்துடன்

(ஆ) "வரியைச் சேகரித்தலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"வரியைச் சேகரித்தலாகாது;

ஆயினும், மேலும் மீளாய்வுக்குட்படாததும் 2003 திசெம்பர் 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்து கொள்ளப்பட்டதுமான தவணைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றல்லாத உடன்படிக்கையொன்றின் கீழான வழங்கலொன்றான 2004 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் செய்யப்பட்ட ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல் மீதான வரியானது அத்தகைய வழங்கல், அத்தகைய உடன்படிக்கைக்குள் குறிப்பாக இனங்காணப்பட்டுள்ளவிடத்து 5ஆம் பிரிவின் (9)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அத்தகைய உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட நேரத்தில் நிலவும் வரிவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம்:-

"(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஆணையாளர் தலைமையதிபதி -

(அ) 1975ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச்சபையுடன் பதிவு செய்யப்பட்ட எவரேனும் தேயிலை உற்பத்தியாளரால் கொழும்பு தேயிலை ஏலத்தில் விற்பனைக்காக எவரேனும் பதிவு செய்யப்பட்ட தரகருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தேயிலையின் மீது அத்தகைய தேயிலை 1975ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட எவரேனும் தேயிலை ஏற்றுமதியாளரால் கொள்வனவு செய்யப்படுமிடத்து ஆணையாளர் தலைமையதிபதியால் விதித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய தேயிலைத் தரகர் அத்தகைய தேயிலையின் கையுதிர்ப்பின்மீது கணக்கிணக்கத்தை கொடுத்துதவும் நேரம்வரை;

(ஆ) பதிவு செய்யப்பட்ட ஆளொருவரால், ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தால் அல்லது தேசிய பொருளாதார நலனைக் கருத்திற்கொண்டு, அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட நன்கொடை முகவராண்மையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி, ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதற்கு ஒப்பந்தக் காரர் ஒருவராக உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள வேறு எவரேனும் ஆளுக்கு, எவையேனும் வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கலின்மீது, அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் பெறுமதி இருபதாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து அத்தகைய பண்டங்கள் அல்லது சேவைகள் அத்தகைய ஒப்பந்தக்காரரால் கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தின் முடிவிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு,

வருமானவரியின் கொடுப்பனவைப் பிற்போடுதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட எந்த ஆளுக்கு (ஆ) என்னும் பந்தியின் கீழ் பிற்போடல் ஒன்று வழங்கப்படுகின்றதோ அந்த பதிவு செய்யப்பட்ட ஆள் அத்தகைய வழங்கல்கள் மீது வருமானவரியை அறவிடும்வரை அவர் வெளியீட்டு வரிக்கு கணக்குக் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுதலாகாது.".

(3) அப் பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் அதற்கான இரண்டாவது காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் "உயர் பெறுமதி கொண்ட பொறித் தொகுதியாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உயர் பெறுமதி கொண்ட பொறித் தொகுதியாக அல்லது பொருட்காட்சிப் பொருட்களாகப் பயன்படுத்தப்படவுள்ள எவையேனும் பண்டங்களாக அல்லது ஏதேனும் தொழில்நுட்ப செய்முறை விளக்கத்திலான பொருட்களாக" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம்.

3. முதன்மைச் சட்டவாக்கக்கத்தின் 3ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "வழங்குநரொருவரால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வழங்குநரொருவரால்; அல்லது" ; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:- அத்துடன்

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஈ) அத்தகைய பண்டங்கள் 2002 ஒகத்து 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட தேயிலையைக் கொண்டிருக்குமிடத்து, எவரேனும் ஆளினால்,

இலங்கையினுள் விற்பனைக்காக 2ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஏலமொன்றில் வைக்கப்பட்டு.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ii) ஏதேனும் வெளிநாட்டுக் கப்பலை, வானூர்தியை அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் கப்பலைப் பழுதுபார்த்தல் அல்லது கடல் கப்பல் சரக்குக் கொள்கலனை மீளப் புதுப்பித்தல்.".

(ஆ) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியை நீக்கம் செய்வதன் மூலமும்:-

"(iiஅ) சேமிப்பிட வியாபாரத்தின்கீழ் மீள் ஏற்றுமதியின் நோக்கத்திற்காக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படு எவையேனும் பண்டங்கள்.";

(இ) அப்பந்தியின் (viii)ஆம் உட் பந்தியை நீக்கம் செய்வதன்மூலமும்;

(2) பந்தி (ஆ) என்பதன் (vi)ஆம் உட் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினால் இலங்கைக்கு வெளியேயுள்ள வேறோர் ஆளுக்கு இலங்கைக்கு வெளியே நுகரப்படுவதற்காக அல்லது பயன்படுத்துவதற்காக புரியப்படும்(ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படாத சேவையொன்றாகிய வேறேதேனும் சேவை.".

சைவர் வீதமிடப்படுதல் வேண்டும். ஆயின் அத்தகைய சேவைக்கான கொடுப்பனவு முழுவதும் இலங்கைக்கு வெளியே இலங்கையிலுள்ள வங்கி ஒன்றின் மூலம் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "பதிவு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னர் வரும் மாதத்தின் கடைசி நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதிவு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி முடிவுற்ற மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) இப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில், "மூன்று ஆண்டுகளுக்குக் குறைவானவொரு காலப்பகுதிக்கான குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படும் பண்டங்கள் மீதான" என்னும் சொற்களிலிருந்து அக்காப்பு வாசகத்தின் இறுதி வரையிலான சொற்களுக்குப் பதிலாக," 2003 யூலை 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2004 சனவரி 1ஆம் தேதிக்கு முன் செய்து கொள்ளப்பட்ட நிதிக் குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படும் பண்டங்கள் மீதான உள்ளீட்டு வரி அத்தகைய பண்டங்கள் மீது அறவிடப்படும் வரி பத்து வீதத்துக்கு மேலானதாக இருப்பினும் பத்து வீதத்தில் அல்லது அதற்குக் குறைவான வீதத்தில் கணிப்பிடப்படுதல் வேண்டும்;

ஆயின் மேலும், தமது வரிவிதிக்கப்படற்பாலதான எல்லா அல்லது பகுதியளவிலான வழங்கல்கள் மீதும் பத்து சதவீதப்படி வெளியீட்டு வரிக்கு கணக்கீடு செய்யும் ஆளொருவரும் அவரால் பெறப் பட்ட அத்தகைய வழங்கல்களின் பெறுமதியின்மீது பத்து சதவீதத்துக்கும் கூடுதலான வீத மொன்றில் உள்ளீட்டு வரியைச் செலுத்தியிருப்பினும், இச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப் படற்பாலதானவாறு அத்தகைய வழங்கல்கள் தொடர்பில் உள்ளீட்டு வரியாக லொறி, மோட்டார் கோச்சு அல்லது வாகனம் ஒன்றின் விடயத்திற்றவிர, அத்தகைய ஆள் பத்து சதவீதப்படி கழிப்பனவு செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்கு "லொறி" அத்துடன் "மோட்டார் கோச்சு" என்பன (2003ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தில் முறையே அவற்றுக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"வகன்" என்பது 1995ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்."

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் ;

"(4) பதிவு செய்யப்படாத ஆளொருவர் வாடகைக் குடியிருப்பு உடன்படிக்கையொன்றின் நியதிகளின்படி அவரது காணியையும் கட்டிடங்களையும், பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கு குத்தகைக்கு விடுமிடத்து, பதிவு செய்யப்பட்ட வேறோர் ஆளினால் அத்தகைய காணியின் மீதும் கட்டடங்கள் மீதும் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பாக உறப்பட்ட எவையேனும் செலவுகள் தொடர்பில் ஏதேனும் உள்ளீட்டு வரிக்கு உரிமை கோருவதற்கு பதிவு செய்யப்படாத ஆள் உரித்துடையவராதலாகாது என்பது

எவ்வாறிருப்பினும், அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள், எந்த உள்ளீட்டு வரித்தொகைக்கு உரிமை கோருவதற்கு உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த உள்ளீட்டு வரித்தொகையைத் தீர்மானிப்பதனை ஆணையாளர் தலைமையதிபதிக்கு இயலச் செய்வதற்கு அவர் திருப்தியுறும் வகையில் அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் போதியளவு சான்றை வழங்குவாராயின், அத்தகைய வாடகைக் குடியிருப்பு உடன்படிக்கையின் காலப்பகுதியின்போது அத்தகைய காணியிலும் கட்டிடங்களிலும் வழங்கப்பட்ட அத்தகைய சேவைகள்மீது அவரால் உறப்பட்ட செலவுகளுக்கு ஆணையாளர் தலைமையதியால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய உள்ளீட்டு வரித்தொகைக்கு அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் உரித்துடையவராதல் வேண்டும்."

(3) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில் "பதிவு செய்யப்படாத ஆளொருவர்" என்பதிலிருந்து "உரித்துடைய வராதல் வேண்டும்;" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(5) இருபத்தோராம் பிரிவின் (1)ஆம் அல்லது (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் விவரத்திரட்டு கொடுத்துதவப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய விவரத்திரட்டு தொடர்புறுத்தும் வரி விதிக்கற்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில் இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படற்பாலதான வரி உள்ளீட்டு வரித்தொகை வெளியீட்டு வரித்தொகையை விஞ்சுமாயின், உள்ளீட்டுத் தொகையின் மிகை மீளளிக்கப்படுதலாகாது. ஆனால் அடுத்தடுத்துறும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் போதும் பின்னரும் வெளியீட்டு வரிக்கெதிரான அவ்வாறே எதிரீடு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய மிகை எந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் முதலாவதாக எழுந்ததோ அந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறுமாத காலப்பகுதியில் அவ்வாறு எதிரீடு செய்யப்படாத அத்தகைய மிகையின் எச்சம் எதுவும் 58ஆம்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மீளளிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அது அவ்வாறு மீளளிக்கப்படாதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, 59ஆம்பிரிவிற்கான காப்பு வாசகத்திற்கமைய அத்தகைய மீளளிப்பு கொடுமதியாக வந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவிலிருந்து ஒருமாத முடிவிற் தொடங்கி மீளளிப்புத் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு அத்தகைய தொகையின்மீது 59ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய வீதத்தில் வட்டி செலுத்துதல் வேண்டும்.

ஆயின், 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் மீதான வரிச் சட்டத்தின்கீழ் 2002, ஒகத்து 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் மீளளிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரியின் ஏதேனும் மிகையின் எச்சம் எதுவும் 2002, ஒகத்து 1ஆம் தேதியன்று நிலுவையிலிருக்குமிடத்து அத்தகைய மிகை இச்சட்டத்தின்கீழ் வரி விதிக்கப்படற்பாலதான ஏதேனும் வெளியீட்டு வரியிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதலாகாது, ஆனால் அதற்கிணங்க 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் மீதான வரிச்சட்டத்தின் கீழ் மீளளிக்கப்படுதல் வேண்டும்;".

(4) அப்பிரிவின் (7)ஆம் உட்பிரிவில் –

(i) "ஏதேனும் கருத்திட்டத்தை" என்பதிலிருந்து "பொறுப்பேற்கின்றவிடத்து" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"ஏதேனும் கருத்திட்டத்தை ஆரம்பித்துள்ளாரென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திக்கு எண்பித்துள்ளதோடு அததகைய தொழிற்பாடு தொடங்கப்பட்டதிலிருந்த முப்பது மாத காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய தொழில் அல்லது கருத்திட்டம் தொடர்பில் வரிவிதிக்கப் படற்பாலதான வழங்கல்களைச் செய்வதற்குப் பொறுப்பேற்கின்றவிடத்து"; அத்துடன்

(ii) "வழங்கல்களைச் செய்வதற்கு" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"வழங்கல்களைச் செய்யத் தொடங்குவதற்கு முப்பது மாதகாலப்பகுதி போதியதல்லாததாக இருக்குமென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்பட்டவிடத்து, அவர் அப்பயன்பட அத்தகைய பதிவு செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் அடிப்படையில் காலப்பகுதியை நீடிக்கலாம்;

ஆயின், உளதாம் தொழில் அல்லது கருத்திட்டம் ஒன்றிற்கென ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆளெரும் அத்தகைய நிகழ்வுபற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் அத்தகைய பதிவு ஏதேனும் புதிய தொழிலை அல்லது கருத்திட்டத்தை உள்ளடக்குவதற்காக நீடிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தலும் வேண்டும். அதன்மீது இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய புதிய தொழிலுக்கு அல்லது கருத்திட்டத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்."; அத்துடன்

(5) அப்பிரிவின் (8)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப்பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(9) 3ஆம் உட்பிரிவிற்கான முதலாவது மற்றும் இரண்டாவது காப்புவாசகத்தின் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும் 2004 சனவரி 1ஆந் தேதி தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு ஏதேனும் சைவர் வரிவிடப்பட்ட வழங்கல்கள் அல்லது பத்து சதவீதப்படி தொடர்ச்சியான வரி விதிக்கப்பட்டுள்ள வழங்கல் ஒன்றைத் தவிர்ந்த வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல் ஒன்றைச் செய்வதற்கு எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் அவரால் பெறப்பட்ட அத்தகைய வழங்கல் பெறுமதி மீது இருபதுவீத வரி செலுத்தப்பட்ட அத்தகைய உள்ளீட்டு வரியின் எழுபத்தைந்து சதவீதம் உள்ளீட்டு வரியாகக் கழிப்பதற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும்.

ஆயின், உள்ளீட்டு வரியானது 2004 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னரான வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியொன்று தொடர்புபட்டிருக்குமிடத்து இருபது சதவீதப்படி வரிக்குப் பொறுப்பான ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல் செய்துள்ள எவரேனும் பதிவு செய்யப்பட்டுள்ள ஆள் மேற்சொல்லப்பட்ட வரையறைகளுக்கு உட்படுத்தப்படுதலாகாது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் IIIஅ என்பதனை உடனடுத்துக் காணப்படும் தலையங்கத்தில் "குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினால் நிதிச் சேவைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக " ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தினால் அல்லது எவரேனும் ஆளினால் நிதிச் சேவைகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் -

"நிதிச் சேவைகளை வழங்கும் தொழிலொன்றைக்கொண்டு நடத்துகின்ற" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(i) 2003 சனவரி 1ஆம் தேதி தொடக்கம் 2003 யூன் 30ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தினால்; அத்துடன்

(ii) 2003 யூலை 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆளினால்,

இலங்கையின் நிதிச் சேவைகளின் வழங்கல்மீது, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் அல்லது ஆள் அத்தகைய நிதிச் சேவைகளை வழங்கும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற விடத்து, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அறவிடப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தினால் அல்லது எவரேனும் ஆளினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு அப் பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(4) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும் எவ்வாறிருப்பினும், இவ்வத்தியாயம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆளெவரும், 2003 யூலை 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மாதம் தொடர்பில் எந்த வரிக்கு அவர் ஆளாகின்றாரோ அந்த வரியை (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமையக் கணிப்பிடும் அவரது எண்ணம் பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் தெரிவிக்கலாம். 5ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்

கைமீட்கப்பட முடியாத அறிவிப்பானது ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவிப்பிலிருந்து தொடர்ந்துவரும் காலப்பகுதிக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(5) வரியைக் கணிப்பிடும் நோக்கத்திற்காக –

(அ) முதலாம் அட்டவணையின் என்னும் விடயத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட வழங்கல்களைத் தவிர இவ்வத்தியாயத்தின் கீழ் வரி விதிக்கப்படற்பாலதான விலக்களிக்கப்பட்ட வழங்கல்களுக்கு;

(ஆ) சைபர் வீதமிடப்பட்ட வழங்கல்களுக்கு ;

(இ) இவ்வத்தியாயத்தின்கீழ் வரிவிதிக்கப்படற்பாதான வழங்கல்கள் தொடர்பிலான சேர் பெறுமதியைத் தவிர, இச் சட்டத்தின் நியதிகளின்படி வரி செலுத்தப்பட்டுள்ள அல்லது செலுத்தப் படற்பாலதான, வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல்களுக்கு;

(ஈ) இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள், கம்பெனி தொகுதியொன்றிலுள்ள குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்றாகிய கம்பெனியொன்றிற்கெழும் அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்படாத ஆனால் நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்படும் சேவைகளையொத்த சேவைகள் வழங்கும் ஆளொருவருக்கெழும் ஏதேனும் இலாபத்தை அல்லது வருமானத்தைத் தவிர, ஏதேனும் கடன், முற்பணம் முற்பணம் அல்லது கடன் வசதி தொடர்பில் அக்கம்பெனித் தொகுதியின் கம்பெனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களினின்றெழுகின்ற அல்லது திரளுகின்ற வட்டியின் மீதான இலாபத்திற்கு அல்லது வருமானத்திற்கு;

(உ) இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள் "குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்றுக்கெழும்" அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்படாத ஆனால் நிதிக்கம்பனியொன்றினால் வழங்கப்படும் சேவைகளையொத்த சேவைகளை வழங்குகின்ற ஆளொருவருக்கெழும் ஏதேனும் இலாபத்தை அல்லது வருமானத்தைத் தவிர எவரேனும் ஆளுக்கு, ஊழியர்களால் மாத்திரம் உதவுதொகை செலுத்தப்படும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், அல்லது ஓய்வூதிய நிதியமொன்று அல்லது ஏதேனும் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டடச் சங்க அல்லது நலன்புரி நிதியம் உட்பட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாயநிதியத்திற்கு அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பணிக்கொடை நிதியத்திற்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற வட்டியின் மீதான இலாபத்திற்கு அல்லது வருமானத்திற்கு அல்லது (வியாபாரம் ஒன்றிலிருந்தெழும் இலாபங்கள் அல்லாத) வட்டி வருமானத்திற்கு;

(ஊ) இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் "குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்துக்கெழும்" அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்படாத ஆனால் நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்படும் சேவைகளையொத்த சேவைகளை வழங்குகின்ற ஆளொருவருக்கெழும் "வருமானத்தைத் தவிர" எவரேனும் ஆளொருவருக்கு எழுகின்ற பங்கிலாப வருமானத்திற்கு;

(எ) (i) 2002, யூலை 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குவதும் 2004 சனசரி 1ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைவதுமான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் போதும், இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள் "ஏதேனும் குறித் துரைக்கப்பட்ட நிறுவனத்திற்கெழும்" அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்படாத ஆனால் நிதிக் கம்பெனியொன்றினால் வழங்கப்படும் சேவைகளையொத்த சேவைகளை வழங்குகின்ற ஆளொருவருக்கெழும் அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் தவிர, எவரேனும் ஆளுக்குச் சொந்தமான கம்பெனிப் பங்குகளின் விற்பனையிலிருந்து அத்தகைய ஆளுக்கு சொந்தமான கம்பெனிப் பங்குகளின் விற்பனையிலிருந்து அத்தகைய ஆளுக்கு அல்லது வேறு ஆட்களினால் அத்தகைய பங்குகளின் கொள்வனவுக்கும் விற்பனைக்கும் காரணமாயிருந்த வேறு எவரேனும் ஆளுக்கு எழுகின்ற இலாபங்களுக்கு அல்லது வருமானத்திற்கு;

(ii) 2004 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்திற்கு அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்படாத

ஆனால் நிதிக் கம்பெனியொன்றினால் வழங்கப்படும் சேவைகளையொத்த சேவைகளை வழங்குகின்ற ஆளொருவருக்கு எழுகின்ற இலாபங்களையும் வருமானத்தையும் தவிர எவரே னும் ஆளுக்கு ச் சொந்தமான கம்பெனிப் பங்குகளின் விற்பனையிலிருந்து அத்தகைய ஆளுக்கு அல்லது இருப்புத் தரகர்கள் தவிர்ந்த வேறு ஆட்களினால் அத்தகைய பங்குகளின் கொள்வன விற்கும் விற்பனைக்கும் காரணமாயிருந்த வேறு எவரேனும் ஆளுக்கு எழுகின்ற இலாபங்களுக்கு அல்லது வருமானத்திற்கு;

(ஏ) இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்திற்கெழும் அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்படாத ஆனால் நிதிக் கம்பெனி யொன்றினால் வழங்கப்படும் சேவைகளையொத்த சேவையை வழங்குகின்ற ஆளொருவருக்கு பிரதானமாக நாணயப் பரிவர்த்தனை தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவருக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற அத்தகைய இலாபங்கள் அல்லது வருமானம் தவிர, நாணயப் பரிவர்த்தனையிலிருந்து எழுகின்ற இலாபங்களுக்கு அல்லது வருமானத்திற்கு,

ஏற்றிக்கூறப்படற்பாலதான சேர் பெறுமதி சைபராகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) பிரிவு 25(அ) என்பதன் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிக்கப்பட்ட சேர் பெறுமதி ஏதேனும் பஞ்சாங்க மாதம் தொடர்பில் எழுபத்தையாயிரத்தை விஞ்சாவிடில் அத்தகைய வரிக்கு ஆளான எவரேனும் ஆளிடமிருந்து வரி எதுவும் அறவிடப்படுதலாகாது.

(7) இப்பிரிவின் நோக்கங்களுக்காக கம்பெனித் தொகுதி என்பது ஒரு தாய்க்கம்பெளி அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துணை நிலைகளைக் கொண்டுள்ளவிடத்தும் அத்துடன் அத்தகைய துணைநிலைகள் அத்தகைய துணை நிலையின் பணிப்பாளர் சபையின் அமைப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவாயினுஞ்சரி அல்லது அத்தகைய துணைநிலையின் ஒப்புரவுப் பங்கு மூலதனத்தின் பெயரளவிலான பெறுமதியில் அரைவாசிக்கு மேற்பட்டதை வைத்திருப்பதன் மூலம் தாய்க் கம்பெனியினால் கட்டுப்படுத்தப்படுகின்றவிடத்தும் ஒரு தாய்க் கம்பெனியும் அதன் எல்லாத்துணை நிலைகளும் என்று பொருள்படும்."

(8) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் 2004 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மாதத்துக்கும் செலுத்தப்படற்பாலதான வரித்தொகை (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சேர்பெறுமதியின் பதினைந்து வீதமாதல் வேண்டும்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஈ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவிற்கான காப்பு வாசகத்தை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:-

"ஆயின் எவ்வாறாயினும் -

(i) 2003 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கி 2004 சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் முடிவடையும், ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு 22ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கணிப்பிடப்பட்ட வரித்தொடர்பில் இவ்வத்தியாயம் தவிர்ந்த இச் சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளின் கீழ்

(அ) எவரேனும் ஆளினால் நியமவீதப்படி கணிப்பிடப்பட்டு உள்ளீட்டு வரிக்கான வரவைக் கழிப்பனவு செய்த பின்னர் ஆணையாளர் தலைமை அதிபதிக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் அத்தகைய வரியின் ஐம்பது சதவீதமும்; அத்துடன்

(ஆ) 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால் குத்தகை வசதிகளின் வழங்கல் தொடர்பில் செலுத்தப்பட்ட ஏதேனும் அத்தகைய வரியின் இருப்பத்தைந்து சதவீதமும்.

இவ்வத்தியாயத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரிக்கெதிராகக் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) 2004 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதிக்கு 22ஆம்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு கணிப்பிடப்பட்ட வரித்தொடர்பில் இவ்வத்தியாயம் தவிர்ந்த இச் சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால் வழங்கப்பட்ட குத்தகை வசதிகள் தொடர்பில் எவரேனும் ஆளினால் கணிப்பிடப்பட்டு உள்ளீட்டு வரிக்கு வரவைக் கழிப்பனவு செய்த பின்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு இருபத்தைந்து சதவீத அத்தகைய வரையறை ஒன்றுக்கு அமைவாக எவரேனும் ஆளினால் கணிப்பீடு செய்யப்பட்டு செலுத்தப்பட்ட வரி இவ்வத்தியாயத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரிக்கு எதிராக கழிப்பனவு செய்யப்பட வேண்டும்.

(2) அப்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

ஆயின், மேலும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், இவ்வத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளொரு வரால் செலுத்தப்படற்பாலதான வரி 25இ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக கணிப்பிடுமிடதது அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாதலாகாது.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவு அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட" என்னும் சொற்களுக்குப்பதிலாக "உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் செயற்படா கடன்கள், இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டவாறான அத்தகைய வங்கியின் புனர மைப்புத் திட்டத்தின் நியதிகளின்படி வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்றப்படுவதைத் தவிர எவரேனும் ஆளினால்செலுத்தப்பட"என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தில் 25ஊ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 25எ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:-

"இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் நிதிச் சேவைகளை வழங்கும் ஆளொருவருக்கு ஏற்புடைத்தாதல்

25எ. ஆளொரவர் நிதிச்சேவைகளை வழங்கும் தொழிலைக் கொண்டு நடாத்துமிடத்து, இவ்வத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகள் அவ்வாளினால் 2003 யூலை 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்யப்பட்ட அத்தகைய சேவைகளின் வழங்கல் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "ஏதேனும் வரி விதிக்கற்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலான வரி அவ்வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவை உடனடுத்துவரும் மாதத்தின் கடைசி நாளுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் வரிவிதிக்கற்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலான வரி அவ்வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ஆம் பிரிவானது (1)ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் "22ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "22ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின்" என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆம் பிரிவானது (2)ஆம் உட்பிரிவின் (ii) என்னும் பந்தியில் "22ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "22ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின்" என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75அ என்னும் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆம் பிரிவானது நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது:-

"நிலை பெயர்கால ஏற்பாடுகள்

76(1) 2002 ஒகத்து 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட ஆள் ஒருவர் அல்லது வேறு எவரேனும் ஆள் விலக்களிக்கப்பட்ட வழங்கல் ஒன்றைச் செய்யும் நோக்கத்துக்காக பண்டங்களைக் கொள்ளுவதன்மீது வரியைச் செலுத்தியுள்ளதாக ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுமிடத்து, அத்தகைய ஆளினால் அவ்வாறு செலுத்தப்பட்ட வரி, ஏதேனும் இருப்பின் அவ்விடத்தில் உள்ளீட்டு வரியாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய வழங்கல் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல் ஒன்றாக பின்னர் வருகின்றது என்பதுடன் முதலாவது கோரிக்கையில் அவ்வாறு கொள்ளப்பட்ட பண்டங்கள் அத்தகைய வரிவிதிக்கப் படற்பாலதான வழங்கலைச் செய்வதில் பயன்படுத்தப்படுகின்றது;

ஆயின், எவ்வாறாயினும் அவ்வாறு கொள்ளப்பட்ட பண்டங்கள், வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல் ஒன்றைச் செய்யும் நோக்கத்திற்காகப் பகுதியளவில் மட்டும பயன்படுத்தப்படுகின்ற விடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல்கள், பயன்படுத்தும் காலப்பகுதி மற்றும் வேறு ஏதேனும் இயைபான விடயத்திற்கேற்றவாறு செய்கின்ற ஆளின் கொள்ளுதல் பெறுமதியைக் கருத்திற்கொண்டு அனுமதிக்கப்படக் கூடியதான, நடவடிக்கை எடுக்கக்கூடியதான அத்தகைய உள்ளீட்டு வரியின் பாகத்தினைத் தீர்மானித்தல் வேண்டும்;

ஆயின், மேலும் கொள்ளப்பட்ட ஏதேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் விலக்களிப்பு வழங்கல்களைச் செய்வதில் முழுமையாகவும் நிறைவாகவும் பயன்படுத்தப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய பண்டங்கள் அல்லது சேவைகளின் நிலையில் மாற்றமொன்றின் காரணமாக வரிவிதிக்கற்பாலதான வழங்கல்களின் விநியோகம்மீது உள்ளீட்டு வரியாக அனுமதிக்கப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தின் 111அ என்னும் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், குறித்துரைக்கப்பட்ட எந்த நிறுவனத்திற்கு ஏற்புடையதாகின்றனவோ அந்த, நிறுவனம் ஒன்றைத் தவிர 2003 யூலை 1ஆந் தேதி தொடங்கி இச் சட்டமானது பாராளுமன்றத்தினால் சட்டமொன்றாக சான்றுபடுத்தப்பட்ட மாதத்தின் கடைசித் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஏதேனும் தொகையைச் செலுத்துவதற்கு ஆளான ஆள் எவரும், அத்தகைய தொகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு இச் சட்டமானது சான்றுபடுத்தப்பட்ட மாதத்தின் கடைசி நாளன்று அல்லது அதன் முன்னர் செலுத்தினால், உரிய தேதியன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்படுவதற்கு ஆளாகும். அத்தகைய தொகையைச் செலுத்திய வராகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய தொகையானது அத்தகைய தேதியன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்படாதவிடத்து அத்தகைய தொகையானது அத்தகைய தொகையின் உரிய தேதியிலிருந்து செலுத்துவதற்குத் தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள் அத்தேதியிலிருந்து பயனுறும் வண்ணம் தவணை தவறிய வராகக் கருதப்படுதலும் வேண்டும்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) "கூட்டுச் சேர்ந்த ஆட்கள்" என்றும் வரைவிலக்கணத்தில், அவ்வரைவிலக்கணத்தின் (அ) என்னும் பந்தியினை நீக்கி அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(அ) ஒரே பங்காளர்களைக் கொண்டுள்ள அல்லது ஒரே பணிப்பாளர்களால் அல்லது ஒரே கம்பெனியினால் முகாமைப்படுத்தப்படுவதும் கட்டுப்படுத்தப்படுவதுமான எவையேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள் என்று; அல்லது

(2) "கல்வித்தாபனம்" என்பதன் வரைவிலக்கணத்தைமுடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) தொழில் பயற்சியை அல்லத செய்முறைப் பயிற்சியை வழங்குவதும் ; அத்துடன் -

(i) அரசாங்கத்தினால் நிதி அல்லது வேறு உதவி வழங்கப்பெறுவதும் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் மூன்றாம் நிலைக்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால், அத்தகைய பயிற்சியை வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டதும்; அத்துடன்

(ii) அத்தகைய நிறுவனத்தின் மிதமிஞ்சிய நிதி அத்தகைய நிறுவனத்தின் பேரளவில் மீள் முறையீடு செய்யப்படுகின்றதுமான,

ஏதேனும் நிறுவனம் என்று பொருளாகும்;".

19. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப் படுகின்றது:-

(அ) "முதலாவது அட்டவணை" என்னும் தலையங்கத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"பகுதி -1

2002 ஒகத்து 1ஆம் தேதி தொடங்கி 2004 சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் முடிவடையும், ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு;

(ஆ) அவ்வட்டவணையின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

(1) அவ்வட்டவணையின் (xi) என்னும் விடயத்தில் (ஐ) ஆம் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:-

"(ஒ) இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டவாறு உரிமமளிக்கப்பட்டவாறான வர்த்தக வங்கியொன்றின் புனரமைப்புத் திட்டம் அல்லது வேறு திட்டத்தின் நியதிகளின்படி எவரேனும் ஆளுக்கு அத்தகைய வங்கியின் செயற்படாக் கடன்களின் கைமாற்றம்;";

(2) அவ்வட்டவணையின் (xxii) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம்:-

"(xxii) இலங்கையிலுள் ஆளொருவரால் இலங்கைக்க வெளியேயுள்ள வேறொரு ஆளினால் இலங்கைக்கு வெளியேயுள்ள வேறொரு ஆளினால் இலங்கைக்கு வெளியே நுகரப்படுவதற்கென அல்லது பயன்படுத்தப்படுவதற்கென இலங்கை ரூபாவில் செய்யப்பட்ட கொடுப்பனவுக்காக அத்தகைய வேறு ஆளுக்கு சேவைகளை வழங்குதல்;";

(3) அவ்வட்டவணையின் (xxviii) என்னும் விடயத்தில் "குருடருக்கான வெண் பிரம்புகள், பிறெய்லி தட்டச்சுப்பொறிகள், உறுப்புக்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குருடருக்கான வெண் பிரம்புகள், பிறெய்லி தட்டச்சுப் பொறிகள், உறுப்புக்கள், பிறெய்லி எழுது கடதாசிகள், பிறெய்லி எழுது பலகைகள் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அவ்வட்டவணையின் (xxviii) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்;

"(xxviii) 1980 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், ஔடதங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், ஔடதங்கள், அதிகாரசபையால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அத்தகைய உற்பத்திப் பொருட்கள் உட்பட மருந்தாக்கல் உற்பத்திப் பொருட்களினதும் ஔடதங்களினதும் (ஒப்பனைச் சாதனங்கள் தவிர) அத்துடன் அத்தகைய உற்பத்திப் பொருட்களின் அல்லது ஔடதங்களின் தயாரிப்பிற்கான அல்லது உற்பத்திக்கான மூலப்பொருட்களினதும் வழங்கல் அல்லது இறக்குமதி;";

(5) அவ்வட்டவணையின் (xxxvi) என்னும் விடயத்தில் "வழங்கலும் இறக்குமதியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வழங்கலும் இறக்குமதியும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) விடயம் (xxxvi) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(xxxvii)அங்கவீனமுற்ற ஆளொருவரின் பாவனைக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட மோட்டார் வாகனம், பிரத்தியேகமாக அத்தகைய அங்கவீனமுற்ற ஆளின் பாவனைக்கானது என அமைச்சர் திருப்தியுறுவதன் பேரில் அவரால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய மோட்டார் வாகனமொன்றின் இறக்குமதி;

(xxxviii)ஏதேனும் மருத்துவ இயந்திரம், மருத்துவ உபகரணம் அல்லது ஓர் அம்பியூலன்ஸ் வெளிநாட்டிலுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்பிடமிருந்து அன்பளிப்பாகும் எனத் திருப்தியுறுவதன்பேரில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றினால் செய்யப்படும் ஏதேனும் மருத்துவ இயந்திரத்தின் மருத்துவ உபகரணத்தின் அல்லது ஓர் அம்பியூலன்சின் இறக்குமதி;

(xxxix) தொழிற் பயிற்சியை அல்லது செய்முறைப்பயிற்சியை வழங்கும் ஏதேனும் நிறுவனத்தால், அத்தகைய நிறுவனத்திற்கு அரசாங்கம் நிதியை அல்லது வேறு உதவியை வழங்கியுள்ளவிடத்தும், அத்தகைய நிறுவனத்தின் மிதமிஞ்சிய நிதி அத்தகைய நிறுவனத்தின் பேணலுக்கான மீள் முதலீடு செய்யப்படுகின்ற விடத்தும் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் பயிற்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் இந்த விடயத்தின் நோக்கங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வழங்கும் நோக்கத்திற்குத் தேவையான எவையேனும் மூலதனப் பொருட்களின் இறக்குமதி,".

(இ) முதலாம் அட்டவணையின் பாகம் - 1 இல் xxxix ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தைச் சேர்ப்பதன்மூலம் :-

"பாகம் -11

2004 சனவரி 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிவிதிக்கப்படற்பாதான காலப்பகுதிக்காக -

(அ) (i) நெல், விதை நெல், அரிசி, கோதுமை, ஏலம், கறுவா, கராம்பு, சாதிக்காய், சோளம், மிளகு, உலர்த்திய தேங்காய், இறப்பர், உடன்தேங்காய், கீரை, அரிசிமா, கோதுமைமா, பாண், குழந்தைகள் பால்மா, முட்டையும் திரவப்பாலும் (பால்மாவிலிருந்து அல்லது ஏதேனும் தானியத்திலிருந்து செய்யப்படாதது);

(ii) 1980ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, ஒப்பனைப் பொருட்கள், உபாயங்கள் மற்றும் ஔடதங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒப்பனைப் பொருட்கள், உபாயங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகார சபையினால் சான்றுப்படுத்தப்பட்ட அத்தகைய உற்பத்திப் பொருட்களும் ஔடதங்கள் உட்பட (ஒப்பனைப் பொருட்கள் தவிர்ந்த) மருந்து உற்பத்திப் பொருட்களும் ஔடதங்களும் மற்றும் அத்தகைய உற்பத்திப் பொருட்களின் அல்லது ஔடதங்களின் உற்பத்தி மற்றும் தயாரிப்புக்கான மூலப்பொருட்களும்;

(iii) ஆயுர்வேத வகையைச் சேர்ந்த அல்லது (ஒப்பனைப் பொருட்களின் தயாரிப்புக்கள் அல்லாத) ஆயுள்வேத தயாரிப்புக்களைச் சேர்ந்த ஆயுள்வேத தயாரிப்புக்கள் அல்லது யுனானி, சித்த வைத்திய அல்லது (ஒப்பனைப் பொருட்களின் தயாரிப்புக்கள் அல்லா) ஹோமியோபதி தயாரிப்புக்கள் மற்றும் அத்தகைய தயாரிப்புக்களுக்கான மூலப்பொருட்கள்;

(iv) வானூர்திகள், உலங்கு வானூர்திகள், முத்துக்கள், வைரங்கள் இயற்கையான அல்லது செயற்கையான அருங்கற்கள் அல்லது மருவிய அருங்கற்கள், வைத்தூள், அரும் உலோகங்கள், அரும் உலோகங்கள் தோய்ந்த உலோகங்கள், தங்க நாணயங்கள் மற்றும் பொறித் தொகுதி அல்லது உபகரணம் எதனினதும் தற்காலிக இறக்குமதி அல்லது பொருட்காட்சிப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டிய அல்லது ஏதேனும் தொழில்நுட்ப விளக்கத்தின் பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டிய ஏதேனும் பண்டங்கள்;

(v) காசோலைப் புத்தகங்கள், பருவ வெளியீடுகள், சஞ்சிகைகள் புதினப் பத்திரிகைகள், தினக் குறிப்புப் புத்தகங்கள், பேரேடு அல்லது அப்பியாசப் புத்தகங்கள் தவிர்ந்த, புத்தகங்கள், மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் பாவிக்கப்படாத அஞ்சல் மற்றும் அரசிறை முத்திரைகள்;

(vi) சுத்திகரிக்கப்படாத பெற்றோலிய எண்ணெய், மண்ணெண்ணெய், வானூர்தி எரிபொருள் மற்றும் கப்பல்களுக்கான எரிபொருள்;

(vii) செயற்கை அவயவங்கள், ஊன்றுகோல்கள், சில்லுக்கதிரைகள், கேட்கும் உபகரணங்கள், அத்தகைய உதவிச் சாதனங்களுக்கான துணையுறுப்புக்கள் அல்லது குறைபாடு அல்லது இயலாமை ஒன்றை ஈடுசெய்வதற்காக மனித உடலில் அணியப்படுகின்ற அல்லது எடுத்துச் செல்லப்படுகின்ற அல்லது பதிக்கப்படுகின்ற சாதனங்கள், குருடருக்கான வெண் பிரம்புகள், பிறெய்லி தட்டச்சுப் பொறிகள் பிறேய்லி எழுதும்தாள் மற்றும் பிறேய்லி எழும் பலகைகள்;

(viii) கமத்தொழில் ட்ரக்டர்கள்;

(ix) செலூலர் நடமாடும் தொலைபேசிகள்;

(x) கமத்தொழில் இயந்திரத் தொகுதி மற்றும் உரங்கள் (01.07.2004 இலிருந்து பயனுறும்)

என்பவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி

பின்வருவனவற்றை வழங்குதல்

(ஆ) (i) கல்வித் தாபனமொன்றினால் அல்லது அரசாங்கப் பாடசாலையால் அல்லது அரசாங்கத்தால் நிதியுதவியளிக்கப்படும் பாடசாலைகளால் அல்லது அரசாங்கப் பாடத்திட்டத்தைப் பின் பற்றுகின்றதுடன் கல்வி அமைச்சுடன் 2004.07.01இலிருந்து பயன்பட பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளால் கல்விச் சேவைகள் மற்றும் அரசாங்கத்தினால், மாகாணசபை ஒன்றினால் அல்லது உள்ளூர் அதிகாரசபை ஒன்றினால் பகிரங்க நூலக சேவைகள்;

(ii) வான் போக்குவரத்து, நீர்ப்போக்குவரத்து, அல்லது உல்லாசப் பயணிகளின் போக்குவரத்து, கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் டாக்சி சேவைகள் தவிர்ந்த இருபத்தெட்டுக்குக் குறையாத பயணிகளின் ஆசனங்களின் கொள்ளளவுடையவையும் அத்தகைய குத்தகை உடன்படிக்கை 2004 சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் செய்து கொள்ளப்படின் அத்தகைய பகிரங்க பயணிகளின் போக்குவரத்துப் பயன்படுத்தப்படுவனவுமான அத்தகைய பகிரங்கப் பயணிகளின் போக்கு வரத்துப் பயன்படுத்தப்படுவனவுமான அத்தகைய மோட்டார் கோச்சுகளுக்கு குத்தகை வசதிகளை வழங்குதல் சுற்றுலாக்கள் மற்றும் டாக்சி சேவைகள் அல்லது பொது பயணிகள் போக்கு வரத்துச் சேவைகள்;

(iii) (205ஆம் அத்தியாயமான) மின்சாரச் சட்டத்தின் கீழ் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு பாவனையாளர் ஒருவருக்கு மாதமொன்றிற்கு 40 கி.வா.ம.வை விஞ்ஞாத மின்சாரம்;

(iv) தொழில்தருநர் ஒருவரால் அவரது ஊழியர்களுக்கு அவர்களது வேலைத்தளங்களில் இலவசமாக அல்லது தணிந்த கட்டணத்தில் உணவுகளையும் அத்துடன் அத்தகைய ஊழியர்களின் வதிவிடத்திற்கும் வேலை இடத்திற்கும் இடையே மோட்டார் கோச்சு ஒன்றைப் பயன்படுத்தி தொழில்தருநர் ஒருவரால் அவரது ஊழியர்களுக்கு இலவசமாக அல்லது தணிந்த கட்டணத்தில் போக்குவரத்து;

(v) ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது எவரேனும் ஆளினால் பிரேத அடக்கம் அல்லது தகனம் தொடர்பிலான சேவைகள்;

(vi) கொடுப்பனவு இலங்கை ரூபாவில் செய்யப்படுமிடத்து இலங்கையிலுள்ள ஆளொருவரால் இலங்கைக்கு வெளியேயுள்ள இன்னுமொரு ஆளுக்கு அத்தகைய வேறு ஆளினால் இலங்கைக்கு வெளியே நுகரப்படுவதற்காக அல்லது பயன்படுத்துவதற்காக சேவைகளை;

(vii) பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் குடிவரவு கருமபீடத்திற்கு அப்பால் அமைந்துள்ள ஒரு சிற்றுண்டிச்சாலையில் சேவைகள்;

(viii) 1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்ற, ஏதேனும் அரசின் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பின் மிஷனுக்கு அல்லது இருவகையிலொத்த நலன்கள் இலங்கையிலிருந்து சென்ற அவர்களது இணையொத்த பகுதியினருக்கு கிடைத்தலும் அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதியால் இனங்காணப்படுதலும் வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய ஆணையாளர்

தலைமையதிபதியினால் இனங்காணப்படுதலும் வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய நன்மைகளுக்கு உரித்துடையவரான அத்தகைய மிஷனின் அல்லது ஒழுங்கமைப்பின் எவரேனும் இராஜதந்திர ஆளணியினருக்கு பண்டங்களையும் சேவைகளையும் ;

(ix) இயற்கையான அல்லது மனித அழிவுகளினால் ஏற்பட்ட திடீர் அவலங்களின் நிவாரணத்திற்காக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதான வெளிநாட்டு ஒழுங்கமைப்புக்களினால் நேரடியாக நிதியுதவியளிக்கப்பட்ட பண்டங்களையும்;

(x) பின்வரும் நிதிச் சேவைகள் -

(அ) ஏதேனும் நடைமுறை, வைப்பீட்டு அல்லது சேமிப்புக் கணக்கின் தொழிற்பாடு;

(ஆ) நாணயப் பரிவர்த்தனை;

(இ) ஏதேனும் பத்திரத்தின் கொடுப்பனவுக் கட்டளையின், காசோலையின் அல்லது கடன் பத்திரத்தின் வழங்கீடு, கொடுப்பனவு, சேகரிப்பு அல்லது சொத்துவத்தின் கைமாற்றம்;

(ஈ) எவரேனும் ஆளினால் கொடுக்குமதியான பணத்திலான அக்கறையாகிய அல்லது செலுத்தப்படுவதற்கான உரிமையாகிய ஏதேனும் கடன் பிணைப் பொறுப்பின் வழங்கீடு, ஒதுக்கீடு, சொத்துவத்தின் கைமாற்றம், வரைதல், ஏற்றல் அல்லது புறக்குறிப்பு;

(உ) ஏதேனும் ஒப்புரவும் பிணையத்தின், கடன் பிணையத்தின் அல்லது பங்கேற்புப் பிணையத்தின் வழங்கீடு, ஒதுக்கீடு அல்லது சொத்துவத்தின் கைமாற்றம்;

(ஊ) ஏதேனும் ஒப்புரவுப் பிணையத்தின், கடன் பிணையத்தின் அல்லது பங்கேற்புப் பிணையத்தின் வழங்கல்களின் கீழ் வரைவு அல்லது உப கீழ் வரைவு;

(எ) ஏதேனும் கடன், முற்பணம் அல்லது கடன் வசதியின் ஏற்பாடு;

(ஏ) (அ)எந்த ஆளுக்கு வழங்கல் செய்யப்படுகின்றதோ அந்த ஆளுக்கு எவ்வசதிக்கென ஒரு புறம்பான விதிப்பனவு செய்யப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றதோ அவ்வசதிக்காக வாடகைக் கொள்வனவு நிபந்தனை விற்பனையொன்றில் அல்லது கடன் விற்பனை உடன்படிக்கையொன்றில் அத் தவணைக் கொடுப்பனவுக் கடன்நிதி வசதி ஏற்பாடுகள்;

(ஆ)அத்தகைய உடன்படிக்கைத் தேதியிலுள்ளவாறாக பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு இலங்கையில் பயன்படுத்தப்பட்டதான ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் அல்லது நிபந்தனையுடனான விற்பனை உடன்படிக்கையின் கீழ் பண்டங்கள்;

(ஐ) ஆயுட் காப்புறுதி "அக்ரகார" காப்புறுதிப்பயிர் மற்றும் கால்நடைகாப்புறுதி;

(ஒ) அமைச்சரின் ஒருப்பாட்டுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் மீளளிப்புத் திட்டம் அல்லது வேறு திட்டத்தின் நியதிகளில் வேறெவரேனும் ஆளுக்கு அத்தகைய கடன்களைக் கைமாற்றும் முறையில் அத்தகைய வங்கியின் நிறைவேற்றப்படாத வங்கிகளின் கைமாற்றம்; என்பவற்றையும்

(xi) 2001 ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முலீட்டுச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச சபையுடன் உடன்படிக்கயொன்றைச் செய்த தொழில் முயற்சியொன்றினால் வதிவிட இடவசதியின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை தவிர்ந்த வாடகை இடவசதியின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை அத்துடன் அத்தகைய உடன்படிக்கை எக் கருத்திட்டத்தைத் தொடர்புறுத்துகின்றதோ அக் கருத்திட்டங்களின் மொத்தச் செலவு பத்து மில்லியன் அமெரிக்க டொலருக்குக் குறையாததும் அல்லது வேறேதேனும் நாணயத்தில் அதற்குச் சமமானதும் மேற்சொல்லப்பட்ட வழங்கல், குத்தகை அல்லது வாடகை புறநீங்கலாக அத்தகைய வழங்கல் தொடர்புபட்டதுமான வாடகை இடவசதியின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை;

(xii) 2001 ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்று, எக்கருத்திட்டத்தைத் தொடர்புறுத்துகின்றதோ அதன் மொத்தச் செலவும் பத்து மில்லியன் அமெரிக்க டொலருக்கு அத்தகைய உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள மருத்துவ நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சௌக்கிய பராமரிப்பு சேவைகள் தவிர்ந்த மருத்துவ நிறுவனங்களினால் அல்லது அத்தகைய பராமரிப்பை வழங்குவதில் தொழிலியல் ரீதியான தகைமை பெற்ற ஆட்களினால் வழங்கப்படும் சௌக்கிய பராமரிப்பு சேவைகளின் எல்லா வழங்கல்களும் என்பவற்றையும் வழங்கல்.

(இ) பின்வருவனவற்றின் இறக்குமதி -

(i) 1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்ற ஏதேனும் அரசின் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பின் மிஷனினால் அல்லது மீள ஏற்றுமதி செய்யப்படுவதற்கான ஒரு தற்காலிக அனுமதியின் கீழான இறக்குமதி உட்பட அத்தகைய மிஷனின் அல்லது ஒழுங்கமைப்பின் எவரேனும் இராஜதந்திர ஆளணியினரினால் பண்டங்கள்;

(ii) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 107ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரயாணிகளின் பொதி (விலக்களிப்பு) ஒழுங்கு விதிகளின் கீழ் தீர்வையற்ற செல்லனுமதிக்கு உரித்துடையதான ஏதேனும் பொருள் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அட்டவணை 'அ' வில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான மீள் இறக்குமதிச் சான்றிதழின் கீழ் தீர்வையற்றதாக செல்லனுமதிக்கப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது கப்பற் களஞ்சியங்களாகப் பயன்படுத்துவதற்கென பிணையம் புறத்து செல்லனுமதிக்கப்பட்ட ஏதேனும் பொருள்;

(iii) அமைச்சர், அத்தகைய பண்டங்கள் இயற்கையால் அல்லது மனித அழிவுகளினால் ஏற்படுத்தப்பட்ட திடீர் இடரின் நிவாரணத்திற்காக வெளிநாட்டிலுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்புக்களிடமிருந்து பெறப்பட்ட கொடையென அல்லது அத்தகைய பண்டங்கள், வைத்திய இயந்திரத் தொகுதி, வைத்திய உபகரணம் அல்லது ஒரு நோயாளர் வண்டி எனத் திருப்திப்படுமிடத்து அவரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதுேனும் ஒழுங்கமைப்பினால் பண்டங்கள்;

(iv) இப் பந்தியின் நோக்கத்திற்காக திறைசேரிக்கான செயலாளரினால் வெளியிடப்பட்ட எதிர் நிரையில் உள்ள ஏதேனும் பொருள் தவிர்ந்த,

(i) அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கருத்திட்டத்தின் கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதி; அல்லது

(ii) நவெம்பர் 19ஆந் தேதிக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட கடைசி உடன்படிக்கைத் தேதியிலிருந்து முப்பத்தாறு மாதங்களுக்குப் பிந்தாமல் இருக்கவேண்டிய தேதியான அத்தகைய கருத்திட்டம் முடிவுறும் தேதிவரை,

இவற்றுள் எது முன்னையதோ அந்தக் காலப்பகுதியின்போது, உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய ஒரு கருத்திட்டம் தொடர்பிலான பொருளாக விதித்துரைக்கப்பட்ட பண்டங்களான, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன்,

(அ) 1996 மே 16ஆந் தேதிக்கு முன்னர்; அல்லது

(ஆ) மொத்தச் செலவுத் தொகையானது 500 மில்லியன் ரூபாவிற்குக் குறையாத கருத்திட்டம் ஒன்று தொடர்பிலான 1998 ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னர்,

உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளவாறான எவரேனும் ஆளினால் பண்டங்கள்;

(V) இப் பந்தியின் நோக்கங்களுக்காக திறைசேரிக்கான செயலாளரினால் வெளியிடப்பட்ட எதிர் நிலையில் உள்ள ஏதேனும் பொருள் தவிர்ந்த.

(அ) 2002 ஒகத்து 1அந் தேதியிலிருந்து இரண்டு வருட காலப்பகுதியொன்றிற்கு; அல்லது

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபையினால் தீர்மானிக்கபட்டவாறான கருத்திட்டம் முடிவுறும்வரை

இவற்றுள் எது முன்னையதோ அதில் நிறைவேற்றப்பட்ட கருத்திட்டம் விலக்களிக்கப்பட்ட வழங்கல்களை மாத்திரம் செய்கின்றதுமானதும் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தில் பயன்படுத்தப்படவேண்டிய கருத்திட்டம் தொடர்பிலான பொருளாக விதித்துரைக்கப்பட்ட, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றினைச் செய்து கொண்டுள்ளவரான எவரேனும் ஆளினதும் பண்டங்கள்;

(vi) பொதி அஞ்சல் அல்லது காவுனர் ஊடாக பத்தாயிரம் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியற்ற தொழில் தொடர்பிலான பிரத்தியேக விடயங்கள் மற்றும் மாதிரிகள்;

(vii) அத்தகைய வாகனம் அத்தகைய ஆளினால் குறிப்பாகப் பயன்படுத்துவதற்கானது என அமைச்சர் திருப்திப்படுவதன்மேல் அமைச்சரினது அங்கீகரிக்கப்பட்டதான அங்கவீன ஆட்களுக்குப் பயன்படுத்துவதற்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டதான அங்கவீன ஆளொருவரினதும் மோட்டார் வாகனம்;

(viii) அரசாங்கமானது அத்தகைய நிறுவனங்களுக்கு நிதியங்களை அல்லது வேறு உதவிகளை வழங்கியுள்ளவிடத்து அத்துடன் அத்தகைய நிறுவனத்தின் மிகையான நிதியங்கள் அத்தகைய நிறுவனத்தின் பேணுகைக்கும் முன்னேற்றத்திற்குமாக மீள முதலீடு செய்யப்பட்டுள்ளவிடத்தும் அமைச்சருடனான ஆலோசனையுடன் மூன்றாந்தரக் கல்வி மற்றும் பயிற்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகரிக்கப்பட்டதுமான தொழில் பயிற்சி அல்லது செய்முறைப் பயிற்சியை வழங்குகின்ற ஏதேனும் நிறுவனத்தினால் பயிற்சி வழங்கும் நோக்கத்திற்காக தேவைப்படும் ஏதேனும் மூலப்பொருட்கள் ;

(ஈ) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக தீர்வையற்ற கடைகளில் பண்டங்களின் இறக்குமதியும் வழங்கலும்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது;

(அ) "இரண்டாம் அட்டவணை" எனும் தலைப்பை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம்:-

2002 ஒகத்து 1ஆந் தேதி அல்லது அதன்பின்னர் தொடங்கி 2004 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக;

(1) அவ்வட்டவணையின் (xviii) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம்:-

(xviii) நிதிக் குத்தகைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதும் ஆனால் இயைபான குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாததுமான பெறப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்மீது வருமதியான மொத்தத் தொகையின் பெறுமதியின் பத்து சதவீதத்தை விஞ்சுகின்றதும் 2003 யூலை 1ஆம் தேதிக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகை உடன்படிக்கையின்கீழ் செலுத்தப்படற்பாலதும் உடன்படிக்கைமீது வருமதியாகவுள்ள மொத்தப் பெறுமதியின் பத்து சதவீதத்தை விஞ்சுவதுமான ஏதேனும் தொகையை முன்னரே செலுத்தித் தீர்ப்பதற்கான ஏதேனும் கொடுப்பனவைத் தவிர, 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால் நிதிக்குத்தகை வசதிகளின் வழங்கல்.";

(2) அவ்வட்டவணையின் (xxiii) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(xxiii) புடவை மற்றும் கைத்தறி உற்பத்திப் பொருட்களின் வழங்கல், அல்லது இறக்குமதி அல்லது புடைவைகளைச் சாயமிடுதல், அச்சடித்தல் ஆகிய சேவைகளை ஏற்பாடு செய்தல்;";

(3) அவ்வட்டவணையின் (xxvi) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(xxvi) சோளம், சோயா அவரை, உணவு அல்லது மீன் உணவு என்பவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி;";

(4) அவ்வட்டவணையின் (xxvii) என்னும் விடயத்தில் "துணைப் பொருட்கள் என்பவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "துணைப் பொருட்கள் என்பவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி;" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(5) அவ்வட்டவணையின் (xxx) ஆம் விடயத்தில் "காணிகளதும் திருத்தங்களதும் வழங்கல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காணிகளின் வழங்கலும் திருத்தங்களும்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம்;

(6) அந்த அட்டவணையின் (xxx) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலம்;

"(xxxi) கம்பினியினதும் நான்கு இழை வரையிலான வடங்களினதும் கவசமற்ற கம்பியினதும் அத்துடன் மைய உட்புரியொன்றுக்கு 16 மி.மீ.க்கு மேற்படாத மின் கடத்திக்குக் குறுக்கு வெட்டுக் கம்பியினதும் வழங்கல் அல்லது இறக்குமதி."

21. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

22. (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவுக்கு -

(i) இச் சட்டத்தின் 2(2)ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2003 யூன், 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ii) இச் சட்டத்தின் 2(3) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2004 சனவரி 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்ததாக கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவிற்கு இச் சட்டத்தின் 4ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2003 யூலை 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) இச் சட்டத்தின் 5ஆம் வாசகத்தால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தமான எல்லா நோக்கங்களுக்காகவும் 2004 யூலை 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவிற்கு :-

(i) இச்சட்டத்தின் 6(1) ஆம், பிரிவிற்கான காப்பு வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2003 ஒற்றோபர் 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ii) இச்சட்டத்தின் 6(2) ஆம், பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2002 ஓகத்து 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(iii) இச்சட்டத்தின் 6(3) மற்றும் 6(4) ஆம் பிரிவுகளினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2004 சனவரி 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(உ) முதன்மைச் சட்டவாக்கத்தின் IIIஅ ஆம் அத்தியாயத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2003 யூலை 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஊ)முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவிற்கு இச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2003 யூலை 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(எ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவிற்கு இச் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2003 யூலை 1 தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஏ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவிற்கு இச் சட்டத்தின் 13ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2004 யூலை 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஐ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 75அ என்னும் பிரிவிற்கு இச் சட்டத்தின் 16ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2004 சனவரி 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஒ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆம் பிரிவிற்கு இச் சட்டத்தின் 17ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2004 சனவரி 1ஆந் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஓ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆம் பிரிவிற்கு –

(i) இச் சட்டத்தின் 18(1)ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2004 சனவரி, 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ii) இச்சட்டத்தின் 18(2) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2003 செத்தெம்பர் 17ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஔ) முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணைக்கு –

(i) இச் சட்டத்தின் 19(ஆ)ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2003 மார்ச்சு, 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ii) இச்சட்டத்தின் 19(ஆ) (2) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2003 மார்ச்சு 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(iii) இச்சட்டத்தின் 19(ஆ) (3) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2003 சனவரி 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(iv) இச்சட்டத்தின் 19(ஆ) (4) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2003 மார்ச்சு 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(v) இச்சட்டத்தின் 19(ஆ) (6) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக 2003 ஒற்றோபர் 17ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(க) முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணைக்கு இச் சட்டத்தின் 20 (1),(2),(3),(4)மற்றும் (6)ஆம் பிரிவுகளினால் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்குமாக, 2004 யூலை 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## 2004ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

[2004ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**2005 நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும் அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளுக்கான செலவினத்திற்கு அந்நிதி ஆண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 2004ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில் "நிதியாண்டு 2005" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 2005 சனவரி 1ஆம் தேதி தொடங்கி 2005 திசெம்பர் 31ஆம் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக மதிப்பிடப்பட்டதான நானூற்றி எழுபத்திஎண்ணாயிரத்தி ஐந்நூற்றி ஏழு மில்லியன் அறுநூற்றி முப்பத்திரண் டாயிரம் ரூபாவாக அரசாங்கத்தின் செலவினத் தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி -

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும், அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படிகளிலிருந்தும் எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டுமொத்தத் தொகையானது நானூற்றி ஐம்பத்தேழாயிரத்து நூற்றிஐம்பது மில்லியன் ஐநூற்றெழுபதாயிரம் ரூபாவை விஞ்சாது,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நானூற்றி எழுபத்தி எண்ணாயிரத்து ஐந்நூற்றி ஏழு மில்லியன் அறுநூற்றி முப்பத்திரண்டாயிரம் ரூபா பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும், அதன்சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையதாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டு 2005 இன்போது இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சிகளின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். ஆனால் அவ்வாறு வரவுவைக்கப்படும் பெறுகைகளின் கூட்டுமொத்தத் தொகையானது, அட்டவணையின் 111ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைக்கு குறைவாகவிருத்தலாகாது. அத்தகைய முயற்சிகளின் தேறிய மிகையானது ஏதேனும் இருப்பின், நிதியாண்டு 2005 முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னதாகத் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பின்வரும் இறுப்பனவுகள் ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலதான, கொடுப்பனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி, முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன மற்றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனத்தின் தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு

(3) நிதியாண்டு 2005இன்போது இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின் பேரிலும், அரசாங்கத்தால் உறப்பட்ட செலவினம், அந்த நிதியாண்டினபோது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால் அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் IIஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டு 2005இன் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IVஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் இறுதியில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புக்கள் அந்த அட்டவணையின் Vஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டு 2005இன்போது எப்போதேனும் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்கும் போதியனவாயிராவிடின், அமைச்சர் அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணமாக திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படற்பாலதாதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம், கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாக கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் IIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதல் ஆகாது. அத்தகைய முயற்சி தொடர்பில் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால், கட்டளைமூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்திற்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5.(1) இச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்கு குறித்தொதுக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரி செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் கட்டளை மூலம் அந் நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட மூலதனச் செலவினத்துக்கென செய்யும் குறித்தொதுக்கலுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவருஞ் செலவினத்தின் அல்லது மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்கலுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்தற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தலைப்பின் கீழ்த்தோன்றும் நிகழ்ச்சித்திட்டம் எதன் கீழும் மூலதனச் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணங்களெவையும் அந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அல்லது நிகழ்ச்சித் திட்டத்தின் ஏதேனும் மீண்டுவருஞ் செலவினத்தின் ஒதுக்கீட்டுக்கு மாற்றப்படுதல் ஆகாது.

(3) உட்பிரிவு(2)இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்" என்ற தலைப்பின் கீழ் காணப்படும் "அரசாங்க வளங்கள் முகாமைத்துவம்" என்பதன் கீழ் மீண்டுவருஞ் செலவினத்திற்கு அல்லத மூலதனச் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதுேனும் பணத்தொகை, திறைசேரிச் செயலாளரினது அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் கட்டளையினால் அட்டவணியிலுள்ள ஏதேனும் வேறு தலைப்பின் கீழான நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாற்றப்படலாம். அவ்வண்ணம் மாற்றப்பட்ட பணமானது, உரிய அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றினால் மேவப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

6. அமைச்சரானவர் -

(அ) வரிகளிலிருந்து வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட பணத் தொகைகளையும்விடக் குறைவாக இருக்குமென; அல்லது

(ஆ) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கென முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேற்கொண்டு தேவைப்படமாட்டாதென திருப்திப்படுமிடத்து, அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்கு உரிய எவையேனும் வேறு நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ்ச் செலவினத்துக்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவினத்தை எதிர்கொள்ளுவதற்காக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அவர் மீட்டுப்பெறலாம்.

7.(1) அமைச்சரானவர், அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 2006ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் சட்டளைமூலம் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் -

(அ) 11ஆம் நிரையிலும் IVஆம் நிரையிலும், அத்துடன் Vஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைகளுள் எதனையும்;

(ஆ) 111ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும்

வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை எதுவும், பாராளுமன்றத்தினால், தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி பயனுடையதாதல் ஆகாது.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை எதுவும் அதன்கண், அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக் கூடியதும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அந்த அட்டவணையின் தோதான நிரைகளுக்கு, ஏதேனும் முயற்சியை, சேர்ப்பதன் மூலமும் அத்துடன்-

(அ) அத்தகைய முயற்சி தொடர்பான எல்லா ஆகக்கூடிய எல்லைகளுக்கும் அல்லது அவற்றுள் எவற்றுக்கும்;

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லைகளுக்கும்

ஏற்பாடு செய்வதன் மூலமும் திருத்தலாம்.

9. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.